Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :225 ஆனி 27ஆம் நாள் சனிக்கிழமை 11 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# கொரோனா இரண்டாவது அலை நேற்று மட்டும் 297 பேர் பாதிப்பு!

## நோயாளர்கள் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 11

இலங்கையில் ஓய்ந்துபோய்க் கொண்டிருந்த கொரோனா வைரஸ் மீண்டும் தனது இரண்டாவது ஆதிக்கத்தை வெளிப்படுத்தியதை அடுத்து நேற்று ஒரே நாளில் 297 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

21 ➤

## கொரோனாத் தடுப்பு குழு ஒரு மாதமாக கூடவில்லை

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 11

கொரோனா தடுப்புச் செயற்பாடுகளுக்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு ஒரு மாதத்துக்கு மேல் கூடவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று உறுதிப்படுத்தியது.

புனர்வாழ்வு ம்த்திய நிலையத்தில் சேவையாற்றிய ஒருவர் மூலம் தற்போது சமூகத்தொற்று மாரவில பகுதிக்கு வந்துள்ளது. நாட்டுக்குள் நடமாடுவதை வரையறுக்கும் சட்டம் இல்லாத நிலையிலேயே தற்போது பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள்

24 ➤

## கொரோனா அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் சாவு

கொழும்பு, ஜூலை 11

முந்தல் மருத்துவமனையை தற்காலிகமாக பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் உயிரிழந்தமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாரவில பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இளைஞனுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

23 ➤

## நாடு மீண்டும் முடக்கப்படலாம் என்கின்றார் சவேந்திர சில்வா

யாழ்ப்பாணம், ஜூலை 11

கந்தக்காடு மறுவாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களில் இனி யாருக்காவது தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுடன் தொடர்புடைய பிரதேசங்கள் முடக்கப்படும். அது சில வேளைகளில் நாடு முழுவதுக்குமான முடக்

23 ➤

## தனிமைப்படுத்தல் சட்டம் அடங்கிய வர்த்தமானியை உடன் வெளியிடுக!

### பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஜூலை 11

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தலுக்காக தனிமைப்படுத்தல் சட்டங்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சு துரிதமாக வெளியிட வேண்டும். பொதுச் சுகாதார பரிசோதகர்களையும் மக்களையும் அபாய நிலைக்கு இட்டுச் செல்ல நாம் தயாராக இல்லை இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளதாவது

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்

23 ➤

## சரவணபவனின் உதவியாளர் வீடு மீது மர்ம நபர்கள் தாக்கு

### மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் நேற்றிரவு அட்டூழியம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான ஈ.சரவணபவனின் தனிப்பட்ட உதவியாளர் கி. அனந்தன் என்பவரின் வீட்டின் மீது நேற்று இரவு இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தி

24 ➤



## வடபகுதியில் 28 பேர் சுய தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் 28 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கு கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மூன்று

21 ➤

## கந்தக்காடு கொரோனா பரவல்கள் சமூகத் தொற்றாக மாறும் நிலை!

### எச்சரிக்கிறது தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு

கொழும்பு, ஜூலை 11

கந்தக்காடு போதைப்பொருள் மறுவாழ்வு நிலையம் ஊடாக ஏற்பட்டுள்ள புதிய தொற்று சமூகத் தொற்றாக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு பிரதான மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

'மறுவாழ்வு நிலையத்தில் பணியாற்றிய ஆலோசகருக்கும் கொரோனா தொற்றியுள்ளது. அவர் தனது வீட்டுக்குச்

21 ➤

## அமைச்சுப் பதவிக்கு ஆசைப்படுகிறார் சுமந்திரன்

### அடுத்த சர்ச்சைப் பேச்சு


யாழ்ப்பாணம், ஜூலை 11

அபிவிருத்திக்காக நாங்கள் செயற்பட வேண்டுமென்பதுடன் முற்றுமுழுதாக நான் ஏற்கிறேன். அரசில் தீர்வொன்று எப்பொழுது வருமென சொல்ல முடியாது. ஜனநாயகச் சூழலில் காத்திருந்து பேச்சு மூலம்தான் பெறமுடியும். போர்ச்சூழல் என்றால் அடித்துப் பறிக்கலாம். இது அப்படியல்ல. அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென சொல்ல முடியாது. அந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் எமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்

23 ➤

# தமிழர்களுக்காக குரல் எழுப்புவோம்

## இப்படிச் சொல்கிறார் ஞானசார தேரர்



கொழும்பு, ஜூலை 11
தமிழர்களுக்கு தீர்வு வழங்குவதற்காக எத்தனை வருடங்கள் பேச்சுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன? இதனால் சாதாரண தமிழ் மக்களே பாதிக்கப்படுகின்றனர். அதிகாரத்தைக் கோரும் தமிழ் அரசியல்வாதிகளோ, கொழும்பு வந்துசென்று சொகுசாக வாழ்கின்றனர். சாதாரண தமிழ் மக்கள் பக்கம் நின்றே இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டும். இதற்காக நாமும் குரல் எழுப்புவோம். இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞான சார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று முதல் இன்றுவரை தேர்தல் காலங்களில் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிக் கதைக்கப்படுவது வழமையாகிவிட்டது. இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற யோசனையை நாம்முன்மொழிகின்றோம். இந்த நாட்டை இதுவரையில் சிங்களத் தலைவர்களே நிர்வகித்துள்ளனர். ஆனாலும், அவர்களுடன் கூட்டணி வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான வாய்ப்பை தமிழ்த் தலைவர்கள் தவறவிட்டுவந்தனர். எனவே, இந்த நிலைமைக்கு சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புக் கூறவேண்டும்.

அதேவேளை, 13, 13 பிளஸ் என்பதெல்லாம் முக்கியம் அல்ல. தமிழ் மக்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான பேச்சுக்களை ஆரம்பித்து, இதோ, இந்தத் தீர்வைத்தான் தம்மால் வழங்கமுடியும் என்பதை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். நிர்வாகத்தை வழங்குவதா, அதிகாரங்களைப் பகிர்வதா என்பது பற்றியும் தெளிவுபடுத்தவேண்டும்.

எத்தனை வருடங்கள் இதற்கான பேச்சுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன? இதனால் சாதாரண தமிழ் மக்களே பாதிக்கப்படுகின்றனர். அதிகாரத்தைக் கோரும் தமிழ் அரசியல்வாதிகளோ, கொழும்பு வந்து சென்று சொகுசாக வாழ்கின்றனர். எனவே, சாதாரண மக்கள் பக்கம் நின்றே இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டும். இதற்காக நாமும் குரல் எழுப்புவோம் - என்றார். (ஓ,5,44)

# செயலணி உறுப்பினர்களுக்கு கோத்தாபயவால் வாய்ப்பூட்டு!

## தனிப்பட்ட கருத்துக்களை பெரிதுபடுத்த வேண்டாம்

**கொழும்பு, ஜூலை 11**

**கிழக்குச் செயலணிக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தெரிவிக்கும் தனிப்பட்ட கருத்துக்களைப் பெரிதுபடுத்தவேண்டாம். அது அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களே இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

கிழக்குச் செயலணி உறுப்பினர் எல்லாவ மேதானந்த தேரர் சில தினங்களுக்கு முன்னர் வழங்கிய நேர்காணலில், கோணேச்சரம் ஆலயம் இல்லை அங்கிருந்தது கோகண்ண விகாரையே என்று குறிப்பிட்டிருந்தார். இது நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பில் அந்தச் செயலணியை நியமித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கேட்டபோது, செயலணி உறுப்பினர்களை நான்தான் நியமித்தேன். அதன் தலைவராக பாதுகாப்புச் செயலர் நியமிக்கப்பட்டுள்ளார். செயலணி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை செயலணியின் கருத்தாக ஏற்கவேண்டாம். அது அவர்களின் தனிப்பட்ட கருத்து. அந்தக் கருத்துக்களை இன, மத, நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் பெருப்பிக்க வேண்டாம். இதேவேளை கருத்துக்களை வெளியிடுபவர்களும் அவதானமாக இருக்கவேண்டும், என்றார். (ஓ,5,22)

# ஊடகவியலாளரை அச்சுறுத்திய பொலிஸ்

கொழும்பு, ஜூலை 11
பொலிஸ் போதைபொருள் தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நியோமல் ரங்கஜீவவை, ஒளிப்படம் எடுக்க முற்பட்ட ஊடகவியலாளரொருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறை வழக்கில் பிரதிவாதியாக முன்னிலைப்படுத்தப்படவுள்ள பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி நியோமல் ரங்கஜீவவை உயர்நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து ஊடகவியலாளர் நேற்று ஒளிப்படம் எடுக்க முனைந்துள்ளார். இதனையடுத்து அவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

'நியோமல் ரங்கஜீவ வந்த போது, நான் சில படங்களை எடுத்தேன் இதனை அவதானித்த அதிகாரி, நீங்கள் யார் என்னைப் படம் எடுக்க என்று என்னை இழுத்துச் சென்றார். நான் எனது அடையாளத்தை நிரூபிக்க ஊடகவியலாளர் அடையாள அட்டையைக் காண்பித்தேன். எனது கமராவிலிருந்த இரண்டு மெமரி கார்ட்டுகளையும் பொலிஸார் பெற்றுக் கொண்டனர்' என்று பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார். (க)



# சிறிதரன் கைதாகலாம்!!!

## மஹிந்த தேசப்பிரிய தகவல்

கொழும்பு, ஜூலை 11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் குறிப்பிட்ட கள்ளவாக்கு விவகாரத்தில், யாராவது உரிய வகையில் முறைப்பாடு செய்தால், சிறிதரன் கைது செய்யப்படும் நிலை உருவாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தான் 75 கள்ள வாக்கிட்டதாக சி.சிறிதரன் ஊடக சந்திப்பொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் பத்திரிகையாளர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் நேற்றுச் சந்தித்துப் பேசினார். இதன்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிதரன் விவகாரம்பற்றி தற்போதுதான் கேள்விப்படுகிறேன். இந்த விடயம் தொடர்பில் உறுதியான முறைப்பாடு தெரிவிக்கப்பட்டால் அவரைக் கைது செய்து விசாரிக்கும் நிலைமை ஏற்படும். 2004ஆம் ஆண்டு தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டு வந்தது. ஆனால், தற்போதுதான் இந்த விடயம் தொடர்பில் அறிகிறேன். எனது முகநூல் பக்கத்திலும் இது பற்றி கேள்வியெழுப்பியிருந்தனர். ஆனந்தசங்கரி 2004ஆம் ஆண்டு தேர்தல் பற்றி பலமுறை குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தார். எனவே இந்த விடயம் பற்றி யாராவது முறையிட்டால் விசாரிக்கலாம் என்றார்.

இதேவேளை, சிறிதரனுக்கு எதிராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரால் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)


# தமிழ் பிள்ளைகளின் கழுத்திலிருந்து சயனைட் குப்பிகளை அகற்றினோம்!

## பெரும் பாக்கியம் என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 11
கடந்த போர்க் காலத்தில் துப்பாக்கியை கையில் எடுத்த பயங்கரவாதிகளுடன் போரிட்டோமே தவிர தமிழ் மக்களுடன் அல்ல. சிறு பிள்ளைகளின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்த சயனைட் குப்பிகளை அகற்ற முடிந்தமையை பாக்கியமாகக் கருதுகிறேன். பயங்கரவாதத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தமையாலேயே இன்று நாட்டவர்கள் அனைவரும் சுதந்திரமாக தங்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கேகாலை கலிகமுவயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்தவுடன் உடனடியாக மீள் ஏற்றுமதியை நிறுத்தியதன் மூலம் விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்கான முதல் அடியை எடுத்து துள்ளது. 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான எங்கள் ஆட்சியின் போது நாட்டுக்கு



உணவு வழங்கிய விவசாய மக்களுக்கும், விவசாயத்துக்கும் உரிய அங்கீகாரம் கிடைத்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த அனைத்து சந்தர்ப்பத்திலும் விவசாயத்தைக் கவனிக்காமல் விட்டது - என்றார். (க)

# இந்தியாவின் தலையீட்டைக்கோர எங்களைப் பலமாக்கல் வேண்டும்

## சீ.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 11

நாங்கள் பலமாக நின்றுகொண்டு இந்தியாவைக் கேட்கலாம். பிரிந்து பிரிந்து ஒற்றை, இரட்டை பிடித்துக் கொண்டு நின்றால் இந்தியாவும் எமது பிரச்சினைக்குள் வர வாய்ப்பு இல்லை. இந்தியாவை குறை சொல்லக்கூடாது. நாங்கள் பலமாக நின்றுகொண்டு, மக்கள் எங்களைத் தெரிவு செய்வார்களோயானால் இந்தியாவைக் கூட வலுவாக நாங்கள் கேட்கலாம், நாங்கள் பலமாக நிற்கிறோம். நீங்கள் எங்கள் பிரச்சினையில் தலையிடுங்கள் என்று சர்வதேசத்தைக் கேட்கலாம். அதன் மூலம் நாங்கள் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் எந்த விடயமாக இருந்தாலும் இறுதி முடிவு இந்நாட்டிலே இருக்கின்ற, பதவியில் இருக்கின்ற அரசுதான் செய்ய வேண்டும். அதை எதிர்க் கட்சிகளும் ஆதரிக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அது சர்வதேசத்தாலேதான் முடியும் இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:

'தமிழ் மக்கள் மத்தியில் எப்பொழுது பார்த்தாலும் அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ தமிழ்த் தலைவர்கள் அரசியல் தீர்வு இப்பொழுது வருகிறது அப்பொழுது வருகிறது என்று சொல்லிக்கொண்டு இருப்பது ஒரு வழமையான விடயமாகப் போகின்றது. இந்த அரசியல் தீர்வு சார்ந்த விடயத்தில் சிங்களம் எப்பொழுதாவது அரசியல் தீர்வை முன்வைக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு, அரசியல் தீர்வை முன்வைப்பதாக பாசாங்கு செய்வார்கள் என்பதுதான் கடந்த 5 வருடகால அனுபவம். அதற்கு முன்னரும் சொன்னார்கள்தான். கடைசியாக கொஞ்சம் படிமுறைக்கு மேலாக வந்தது.

மொழி சம்பந்தமாக இன்றைக்கு சிங்களம் மட்டும் சட்டமில்லை. தமிழும் சிங்களமும் தேசிய மொழிகள் என்று வந்துவிட்டதுதானே. உத்தியோகபூர்வ மொழி என்று வந்துவிட்டதுதானே. மாற்றம் நடைபெற்றதுதானே. அதேபோல் 78ஆம் ஆண்டு அரசமைப்பில் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற வசனம் இருக்கிறது. இன்றும் அதுதான் இருக்கிறது. ஆனால் முக்கியமான விடயம் நடந்தது. இந்த முன்மொழிவிலே என்ன நடந்தது என்றால் ஏனைய மதங்களுடைய உரிமை இப்பொழுது இந்த மதங்கள் என்ற ஏற்பாட்டுக்குள்ளே உள்ளடக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அது அடிப்படை உரிமைகளுக்குள் கொண்டுபோய் செருகப்பட்டுள்ளது.

ஆனால் எங்களில் சிலர் இது ஒரு மதசார்பற்ற நாடு என்கின்றார்கள். இது எல்லாம் அர்த்தமில்லாமல் யதார்த்தமில்லாமல் நாங்கள் கதைப்பது. இந்தியா மத சார்பு இல்லாத நாடாக இருக்கிறது. ஆனால் பாரதீய ஜனாதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் அங்கு அப்படி நடக்கிறதா? இல்லை. நடைமுறை அப்படி. 74 வீதமான பௌத்தர்கள் மதசார்பற்ற நாடாக இந்த நாட்டை மாற்ற முடியாது என்று மறுக்கின்றார்கள். எங்களுடைய மதங்களுக்கான ஏற்பாட்டை மதங்களுக்குள் கொண்டு வந்தது முன்னேற்றம். ஆனால் அது திருப்தி இல்லை. இது மதசார்பற்றதல்ல. இதைக் கேட்கிறவர்களுக்கு நான் பொதுவாகச் சொல்கிறேன். தனிய ஒரு மதத்திற்குச் சொல்லவில்லை. இப்ப இருக்கிற நிலையிலே நாங்கள் மிகக் கவனமாக கையாளவேண்டும். நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பது உண்மைதான். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேணும். இதுதான் யதார்த்தம்.

தந்தை செல்வா அவர்களையே ஏமாற்றியவர்கள் என்பது என்னுடைய கருத்து. இது புதியவர்களுக்குத் தெரியாது. 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் டட்லி சேனநாயக்காவுடன் உடன்படிக்கை செய்து திருச்செல்வத்தை அமைச்சராக்கினார்கள். பின்னர் 1968இல் பதவி விலகி யாழ்ப்பாணம் வந்தனர். முதலில் என்னுடைய ஊரான கல்வியங்காட்டில் முதலாவது பொதுக் கூட்டம் நடந்தது. அப்பொழுது மக்கள் மத்தியில் சரியான கொந்தளிப்பு நிலை காணப்பட்டது. தந்தை செல்வநாயகம் பேச எழும்பினார் அவர் பெரிதாக ஒன்றும் பேசவில்லை. நாங்கள் அவர்களை நம்பினோம். ஏமாற்றி விட்டார்கள். ஏமாந்து போனோம் இவ்வளவுதான் சொன்னார். அந்த சபையில் ஒரு சலனம், சத்தம் இல்லை. அமைதியாக இருந்தது. தந்தை அவ்வளவுதான் சொன்னார். ஏன் நான் இது சொல்கிறேன் என்றால் அவர் உண்மையைச் சொன்னார். நம்பிய எங்களை ஏமாற்றி விட்டார்கள் ஏமாந்து போனோம். இன்றைக்கும் இது இருக்கிறது. இது ஒரு வரலாறாக நடைபெறுகின்றது. இதை நாங்கள் என்னவென்று ஒளிக்கிறது. அது உண்மை. சர்வதேசத்தையும் குறிப்பாக இந்தியாவையும் இணைத்து, இந்தியா இதில் கொண்டிருக்கிற தெளிவான வகிபாகத்தை பலப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இந்தியாவுக்குப் பொறுப்பு இருக்கிறது.

அதை நாங்கள் வலியுறுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அதன் ஊடாக சுமுகமான சூழலை இந்தியா மூலம் ஏற்படுத்த வேண்டும். நாங்கள் பலமாக நின்று கொண்டு இந்தியாவையும் கேட்லாம். நீங்கள் பிரிந்து பிரிந்து ஒற்றை, இரட்டை பிடித்துக் கொண்டு நின்றால் இந்தியாவும் அதில் வர வாய்ப்பு இல்லை. இதில் இந்தியாவை குறை சொல்லக்கூடாது. நாங்கள் பலமாக நின்றுகொண்டு மக்கள் எங்களை தெரிவு செய்வார்களோயானால் இந்தியாவைக் கூட வலுவாக நாங்கள் கேட்கலாம் நாங்கள் பலமாக நிற்கிறோம். நீங்கள் எங்கள் பிரச்சினையில் தலையிடுங்கள் என்று சர்வதேசத்தைக் கேட்கலாம். அதன் மூலம் நாங்கள் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் எந்த விடயமாக இருந்தாலும் இறுதி முடிவு இந்நாட்டிலே இருக்கின்ற, பதவியில் இருக்கின்ற அரசுதான் செய்யவேண்டும். அதை எதிர்க்கட்சிகளும் ஆதரிக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அது சர்வதேசத்தாலேதான் முடியும், என்று கூறினார்.

(ஓ,5)

சபையில்
சரவணபவன்



கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஊடக ஒடுக்குமுறை மேலோங்கியிருந்ததை நாமறிவோம். ஊடகங்கள் தாக்கப்பட்டன, எரியூட்டப்பட்டன, பல ஊடகவியலாளர்கள் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டனர், கொல்லவும்பட்டனர். இன்னும் பலர் காணாமலாக்கப்பட்டனர். இன்னும் சிலரோ சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய நிலை எழுந்தது.

2015ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்பு இத்தகைய அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமென்ற எதிர்பார்ப்பு பொதுமக்களிடமும், ஊடகத் துறையினரிடமும் வலுவூன்றியிருந்தது. நேரடியான ஊடக ஒடுக்குமுறை களையப்பட்டுள்ளது என்பதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் இரு விடயங்களில் நாம் அதிக தூரம் முன்செல்ல வேண்டியுள்ளது என்பதை இங்கு நான் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

அடுத்தது 2015இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டபோது கடந்த காலத்தில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் இருந்தது. பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர்; படுகாயங்களுக்கு உட்படுத்தப்பட்டனர்; நாட்டை விட்டு ஓட நிர்ப்பந்திக்கப்பட்டனர்; காணாமற்போகச் செய்யப்பட்டனர். பல ஊடக வளங்கள் தாக்கப்பட்டு சேதங்களுக்கு உட்படுத்தப்பட்டன. இவை தொடர்பாக ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்பும் எவரும் தண்டிக்கப்படவில்லை. ஒன்றிரண்டு வழக்குகள் இடம்பெற்றாலும் அவையும் இழுபட்டே செல்கின்றன. பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

– ஜூன் 2018

4
X

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவில் மீள எழுந்தது சர்ச்சை

**யாழ்ப்பாணம், ஜூலை 11**

**யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவில் மீண்டும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட புதிய நடைமுறைகளின்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி நடக்கவுள்ள துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீடு செய்யும் பேரவை உறுப்பினர்கள் தொடர்பாகவே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.**

பல்கலைக்கழகத்தின் நடப்பாண்டில் கலாநிதி கற்கை நெறிக்கு மாணவராகப் பதிவு செய்துள்ள ஒருவர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டுப் புள்ளியிடலை மேற்கொள்ள முடியுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட புதிய நடைமுறைகளின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காகப் பதிவாளரால் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கான முடிவுத் திகதியாக அறிவிக்கப்பட்ட ஜூன் மாதம் 9 ஆம் திகதியன்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக 6 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அந்த 6 பேரினது தகுதி, தராதரங்களின் அடிப்படையில் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து, திறமை அடிப்படையில் முதல் 5 பேரின் புள்ளி விவரங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதியன்று நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். அன்றைய தினமே பேரவை உறுப்பினர்களும் தனித்தனியாக மதிப்பீடு செய்து செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பேரவையில் மூதவை சார்பில் அங்கம் வகிக்கும் ஒருவர், பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் மாணவராகப் பதிவு செய்து, கற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை, குறிப்பிட்ட பீடத்தின் பீடாதிபதியும் ஒரு துணைவேந்தர் விண்ணப்பதாரியாக இருப்பதனால் முரண்நகையைத் தோற்றுவிக்கலாம் என்று ஏனைய விண்ணப்பதாரிகளும், பேரவை உறுப்பினர்களும் விசனமடைந்திருக்கின்றனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எழுத்து மூல தெளிவுபடுத்தல் பெறப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் கேள்வி எழுப்பவிருக்கின்றனர். (எ-5)

## ஹெரோய்ன் கடத்தினாரென பெண் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜூலை 11

பெருந்தொகையான ஹெரோய்ன் கடத்திய குற்றச்சாட்டில் கொழும்பில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - முல்லேரியா பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின்போதே மேற்படி பெண் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 1.3 கிலோ ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. (ம)

## பொலிஸ் உத்தியோகத்தர் வீதி விபத்தில் படுகாயம்!

கொடிகாமம், ஜூலை 11

தெல்லிப்பளை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் காயமடைந்து நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கோப்பாய் சந்திக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் எஸ்.சஜீவன் என்பவரே படுகாயமடைந்தார். கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)



## வாளுடன் இளைஞர் கைது

கிளிநொச்சி, ஜூலை 11

வாள் ஒன்றை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் தருமபுரத்தில் ஒருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 5ஆம் யுனிற் பகுதியில் ஒருவர் வாள் வைத்திருப்பதாகச் சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். 24 வயதான இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்வேறு வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணியிருக்கலாம் என்ற கோணத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## ஹெரோய்ன் வைத்திருந்தவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 11

ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று உதயநகர் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபரிடம் இருந்து 100 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேநபர், சான்றுப் பொருளுடன் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்துள்ளார். (எ-6)

## அதிகாரம் கிடைக்க முன்னரே தீர்வு பெற்றுக்கொடுத்தேன்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

மின்சாரக் கட்டணத்திற்கு எமது அரசாங்கத்தில் நிவாரணமொன்றைப் பெற்றுக் கொடுப்போம் என்று அண்மையில் நான் குறிப்பிட்டேன். நான் அவ்வாறு கூறிய பின்னர் மின்சாரக்கட்டணத்திற்கு நிவாரணமளிப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆகவே நான் அதிகாரதுக்கு வரமுன்னதாகவே வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றி வைத்திருக்கிறேன். அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத்தருவேன்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஹர தேர்தல் தொகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

கடந்த சில மாதகால மின்சாரக்கட்ட ணத்திற்கு எமது அரசாங்கத்தில் நிவாரணமொன்றைப் பெற்றுக்கொடுப்போம் என்று அண்மையில் நான் குறிப்பிட்டேன். நான் அவ்வாறு கூறிய பின்னர் மின்சாரக் கட்டணத்திற்கு நிவாரணமளிப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. ஆக நான் அதிகாரத்துக்கு வரமுன்னதாகவே ஒரு வாக்குறுதியை நிறைவேற்றி வைத்திருக்கிறேன். அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுத் தருவேன்.

2015 ஆம் ஆண்டில் நாம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட போது நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சீர்குலைந்திருந்தது. நாடு பெற்றுக்கொண்ட கடன்களின் தவணைக்கொடுப்பனவைக் கூட மீளச்செலுத்த முடியாத நிலையே அப்போது காணப்பட்டது. எனினும் அரச சேவையாளர்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பின் மூலமாகவே அத்தகையதொரு நெருக்கடி நிலையை எம்மால் வெற்றிகொள்ள முடிந்தது. மீண்டும் 2019 உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களையடுத்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிகண்டது. எனினும் மீண்டும் அரச ஊழியர்களின் பங்களிப்புடன் அதனை சீரமைத்தோம்.

இந்நிலையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலை ஒருசில மாதங்களில் முடிவிற்கு வராது. மாறாக இது மீண்டெழுவதற்கு சுமார் இருவருடங்களாகும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கின்றன. மேலும் சில அமைப்புக்கள் 3 வருடங்களாகும் என்று கூறியிருக்கிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் மக்களால் அவர்களது வாழ்க்கையைக் கொண்டுநடத்த முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அதேவேளை, மக்களின் பொருளாதார இயலுமையையும் வலுப்படுத்தக்கூடிய ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சியிடம் மாத்திரமே இருக்கின்றது- என்றார். (எ)

## துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 11

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 4 துப்பாக்கிகளுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹினிதும வீரபொத்த கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் உடுகம நீதிவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ரி1)

# மக்களுக்கு உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைகள்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 11**
**இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டு மக்களுக்கு உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இல்லாவிடில் நாட்டில் கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்டால் அதன் பொறுப்பை சுகாதார பிரிவு அதிகாரிகளுக்கே ஒப்படைக்க வேண்டும் எனச் சங்கத்தின் செயலாளர் சேனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த போது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு வாரத்துக்கு இரண்டு முறை கூடி கலந்துரையாடல் மேற்கொண்டு தீர்மானம் எடுத்தபோதிலும் தற்போது மாதம் ஒருமுறையே இந்தக் குழு கூடுகின்றது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ரி1)




ஹெரோய்ன் வர்த்தகம்

# கைது செய்யப்பட்ட அதிகாரிகளின் 7 வாகனங்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 11
ஹெரோய்ன் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் இரண்டு அதிகாரிகளுக்குச் சொந்தமான 7 வாகணங்கள் கைப்பற்றப்பட்டுள் என.

இந்த வாகனங்கள் மீரிகம மற்றும் பல்லேகல ஆகிய பிரதேசங்களில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய இவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்படி, நான்கு பாரவூர்திகள், 2 கார்கள், ஒரு மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கொன்ஸ்டபிளுக்குச் சொந்தமான வாகனங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ரி1)

# இரண்டாம் காலாண்டில் பொருளாதாரம் பாதிப்புறும்


## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 11
2020 இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடுமையாகப் பாதிக்கப்படும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கொரோனா பரவல் உலகளாவிய ரீதியில் அண்மைக்கால வளர்ச்சி வாய்ப்புக்களைக் கணிசமான ளவுக்குப் பாதித்திருக்கின்ற நிலையில், இலங்கை தொடர்பில் கிடைத்துள்ள குறிகாட்டிகளிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




அதன்படி மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தையும், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தையும் 100 அடிப்படைப்புள்ளிகளினால் முறையே 4.50 சதவீதத்துக்கும் 5.50 சதவீதத்துக்கும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனூடாக சந்தைக்கடன் வழங்கல் வீதங் களை மேலும் குறைப்பதைத் தூண்டி, அதனூடாகப் பொருளாதாரத்தின் உற்பத்தியாக்கத் துறைகளுக்கான கடன் வழங்கலை தீவிரமான முறையில் அதிகரிப்பதற்காக நிதியியல் முறைமையை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

இது கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும், பரந்த பொருளாதாரத்துக்கும் வலுவான ஆதரவை வழங்கும் என்று எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி தெரிவித்திருக்கிறது. (ரி1)





மாற்றுத் திறனாளிகள் அமைப்பு

# உரிமைகளைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை!

மூதூர், ஜூலை 11
திருகோணமலை பட்டணமும் சூழலும், பிரதேச செயலகத்தில் இயங்கிவரும் வாட்றகோ மாற்றுத் திறனாளிகள் அமைப்பினர் தமக்கான உரிமைகளைப் பெற்றுத் தருமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

அது தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய பதாகை ஒன்றை பிரதேச செயலகத்தின் முன்னால் நேற்றுக் காலை காட்சிப்படுத்தியுள்ளனர்.

இந்தப் பதாகையில் மாற்றுத் திறனாளிகளுக் கான 3 வீத தொழில் வாய்ப்பை உறுதி செய்யுமாறும், தேர்தல்களில் எமது வாக்குகளை அளிப்பதற்கான வசதிகளைப் பெற்றுத்தருவதுடன் தமது தேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான விசேட அடையாள அட்டையைப் பெற்றுத் தருமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட வேலைத்திட்டம் (2014) ஒன்றை முன்னெடுத்தி ருந்தார். இது முழுமையாக அமுலுக்கு வரவில்லை.

எனவே தற்போதைய ஜனாதிபதியும் அமையவுள்ள அரசாங்கமும் மாற்றுத் திறனாளிகளுக் கான தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்கு மாறு எமது கோரிக்கையை முன்வைக் கின்றோம் என்று வாட்றகோ மாற்றுத் திறனாளி கள் அமைப்பின் தலைவர் கிருஸ்டி அன்டனி கருத்துத் தெரிவித்துள்ளார். (ரி2-40)

# விளையாட்டுத்துறை பிரதிநிதிகள் கிளி.இந்துக் கல்லூரிக்கு விஜயம்

கிளிநொச்சி, ஜூலை 11
மத்திய விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் வடமாகாண கல்வித் திணைக்கள பிரதிநிதிகள் வடமாகாண துடுப்பாட்ட அபிவிருத்தியை மேலும் விருத்திசெய்யும் முகமாக பாடசாலைகளை பார்வையிடுவதற்காக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதனடிப்படையில், கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்ட குறித்த பிரதிநிதிகள், கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை பார்வையிட்டதுடன் துடுப்பாட்டத்துக்கான உரிய அபிவிருத்திகள் தொடர்பாக கல்லூரி முதல்வர் மற்றும் விளையாட்டுத்துறை ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

குறித்த குழுவில் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளரும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமான T.சிறீரஜீவன், வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் பாடசாலை துடுப்பாட்ட சங்க இணைப்பாளர் நிஷாந்தன், 13 வயதிற்கு கீழ்பட்ட பிரிவினருக்கான போட்டிச் செயலாளர் அத்தப்பத்து, வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் இ.ராஜசீலன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு துறை இணைப்பாளர் அனுராகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி3-222)

### கப்பலுக்கு தாமதக் கட்டணம்

# அரசின் கவனயீனத்தால் ரூ9 கோடி அநியாய இழப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி கடும் விசனம்

**கொழும்பு, ஜூலை 11**

**கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்ட மூன்று பளு தூக்கிகளையும் கப்பலிலிருந்து இறக்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குறித்த கப்பலுக்கு சுமார் 9 கோடி ரூபா வரை தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.**



இந்த பளுத்தூக்கி விவகாரத்தை தொடர்ந்து துறைமுக தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் மற்றும் அரசின் இழுபறிகளினாலேயே இவ்வாறானதொரு பெரிய தொகையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தின் போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த பளு தூக்கிகளை கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் பொருத்துவது குறித்து இந்தியாவுடன் அரசு பேச்சு நடத்தியிருந்தபோதும், இணக்கப்பாட்டை எட்டுவதில் அரசு தோல்வி கண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை , இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியாக கொழும்புத்துறைமுகத்தின்கிழக்குமுனைய அபிவிருத்தித் திட்டத்துக்கான பூர்வாங்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் துறைமுகத்தின் உரிமம் 100 வீதமாக இலங்கை துறைமுக அதிகார சபையைச் சார்ந்திருக்கும். திட்டத்துக்கான செலவீனமாக 70 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 0.1 வீதத்திலான 40 ஆண்டுக்கால மென் கடனை ஜப்பான் வழங்கவும் தீர்மானித்தது.

உலகில் மிகவும் சிறந்த துறைமுக தொழில் நுட்பம் ஜப்பானிடமே உள்ளது. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பானின் கூட்டு முயற்சியில் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூன்று பளுதூக்கிகளை கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் பொருத்துமாறு வலியுறுத்திய துறைமுக தொழிற்சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டது. எவ்வாறாயினும் குறித்த பளுதூக்கிகள் தற்போது கிழக்கு முனையத்தில் பொருத்தப்பட்டுள்ளன. செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான கட்டளை கிடைக்கப்பெறவில்லை என்று இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தின் துறைமுக கிளையின் தலைவர் பிரசன்ன களுத்துரகே தெரிவித்தார்.

அத்துடன் இந்தியாவின் கரையோரப் பகுதிகளில் 14 துறைமுகங்கள் அந்நிய முதலீடுகளுக்காக காத்திருக்கையில் கொழும்புத் துறைமுகத்தின் மீது எதற்காக ஈடுபாடு காட்ட வேண்டும் எனவும் கேள்வியெழுப்பினார்.

ஆனால் ஏற்கனவே திட்டமிட்டபடி ஜப்பான் தொழில்நுட்பத்தை கிழக்கு முனையத்தில் உள்வாங்காது சீன பழுத்தூக்கிகள் பொறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## இலங்கை – ஆப்கான் ஒப்பந்தம் அங்கீகரிப்பு

தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளிகளை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசுக்கும் இடையே ஒப்படைத்தலுக்காக முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் பயங்கரவாதச் சட்டத்தின் கீழும் போதைப்பொருள் கடத்தல் குற்றத்திலும் கைதுசெய்யப்பட்டவர்கள் ஒப்படைக்கப்படமாட்டார்கள் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரொமேஷ்பத் பதிரன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தக் காரணிகளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் குற்றமிழைத்துத் தண்டனை நிறைவேற்றப்பட்டு சிறையில் அடைக்கப்படும் வேற்று நாட்டுப் பிரஜைகளுக்கு குற்றவாளியின் நாட்டில் தண்டனையை அனுபவிக்கவும், வெளிநாடொன்றில் அவ்வாறு தண்டனைக்கு ஆளாகிய இலங்கையருக்கு குறித்த தண்டனையை இலங்கையில் அனுபவிக்கவும், ஏற்புடைய வகையில் இலங்கைக்கு ஒப்படைத்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 1995 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க குற்றவாளிகள் ஒப்படைத்தல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. குறித்த சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை ஏனைய நாடுகளுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளவேண்டும். அதற்கமைய இலங்கையிலும் ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசிலும் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளவர்களில் பயங்கரவாதச் செயல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக குற்றமிழைத்து தண்டனை நிறைவேற்றப் பட்ட குற்றவாளிகள் தவிர்ந்த ஏனைய குற்றவாளிகள் இரு நாடுகளுக்குமிடையே பரிமாற்றிக் கொள்வதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள், மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட மனு என்பன அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது-என்றார். (ஐ)

## சிறுமி வன்புணர்வு: தாயும் கடைக்காரரும் விளக்கமறியலில்

அம்பாறை, ஜூலை 11

தாயின் ஒத்துழைப்புடன் 13 வயது சிறுமியை வன்புணர்ந்தவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிமன்று உத்தரவிட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர், சிறுமியினுடைய தாயுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

“சிறுமியின் தந்தை 3 வருடங்களாக வெளிநாட்டில் உள்ளார். அதனால் தாய் வர்த்தகர் ஒருவருடன் தொடர்பை பேணி வந்துள்ளார் என்றும் சுற்றுலாச் செல்வதாகக் கூறி மகளை அழைத்துச் சென்ற தாய் இரவுதங்கு விடுதியொன்றில் மகளை தனியான அறையொன்றில் தங்க வைத்து விட்டு அவர் காதலனுடன் தனியாக இருந்துள்ளார். அத்துடன் மகளுக்கு மயக்க மருந்து கொடுத்து கள்ளக் காதலன் வன்புணர உடந்தையாக இருந்தார் என்பதும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.” என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

வீடு திரும்பிய சிறுமி வேதனை தாங்க முடியாமல் உறவினரிடம் நடந்த சம்பவத்தைக் கூறியுள்ளார்.

அதை அடுத்து தாயும் வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபரையும் பொலிஸார் கைதுசெய்தனர். (கு)

## போதைப்பொருள் கடத்தல்; கைதானார் கலுமில்லி!

போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கையின் முக்கிய நபர்களுள் ஒருவரான 'கலுமல்லி' என்றழைக்கப்படும் ரொஹான் பிரதீப் அங்கொட பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாளக் குழு உறுப்பினரான கொஸ்கொட தாரகவின் சகாக்களுள் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொஹான் பிரதீப் தொடர்பான கைதின் ஆரம்பகட்ட விசாரணைகளில் அவரது வங்கிக் கணக்கில் 42.8 மில்லியன் ரூபா பணம் இருந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (து)

## வேட்பாளர்களின் ஸ்டிக்கர்களை வாகனங்களிலிருந்து அகற்றவும்

### தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 11

தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணான விதத்தில் வாகனங்களில் ஸ்டிக்கர்கள் அல்லது பதாகைகள் ஒட்டப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தேர்தல் சட்டத்தின்படி அவை குற்றச் செயல்கள் என்பதனால் உடனடியாக அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

வேட்பாளர் பயணம் செய்யும் பிரத்தியேக வாகனம் தவிர்ந்த வேறு வாகனங்களில் மேற்கூறிய ஸ்டிக்கர்கள் அல்லது பதாகைகளைக் காட்சிப்படுத்தலாகாது. இது 1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 74 ஆம் பிரிவின் கீழ் குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தனியார் பேருந்துகளிலும் முச்சக்கரவண்டி களிலும் ஏனைய தனியார் வாகனங்களிலும் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருப்பின் உடனடியாக அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதற்காக ஒவ்வொரு பொலிஸ் அதிகாரப் பகுதிகளையும் உள்ளடக்கும் விதத்தில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கும் அதன் மூலம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (து)

## மாற்றி வாசிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 10

பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் குகதாசனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகளே நிறைவுற்றுள்ளன. அந்த விசாரணை அறிக்கை மேலதிக நடவடிக்கைக்காக மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று உதயனில் வெளியான செய்தியில் பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் குகதாசனுக்கு பதிலாக தேவநேசன் என்று தவறுதலாக பெயர் மாறி பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (து)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இராவண அரசியல்!

'இராவணன் சிங்களவன்' என்று கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணியைச் சேர்ந்த மேதானந்த தேரர் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், இராவணனை சிங்களவனாகவே ஆக்கிவிடுவதற்கான முனைப்புக்கள் தெற்கில் கடுமையாக முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தல் காய்ச்சலை விடவும் இராவணனை தமது உடமை ஆக்குவதில் சிங்கள பேரினவாதிகள் கடும் முனைப்புடன் செயற்படுகின்றனர். அதிலும் அரச ஆதரவுடன் செயற்படும் பௌத்த தேரர்கள் இராவணனை ஒரு பிடிபிடித்து விடுவது என்பதில் விடாப்பிடியாக உள்ளனர். ஆக, மகாவம்சத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட தமது வரலாற்றை சிங்களவர்கள் தற்போது அழித்து திரித்து எழுதத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையாகின்றது.

மகாவம்சம்தான் தமக்கு அறுதியானது என்று சிங்களவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்கள் இரண்டு சிக்கல்களை அல்லது வரலாற்று மட்டுப்படுத்தல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஒன்று, சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல்கள் என்பது. ஒரு மிருகத்தின் வழித்தோன்றல்களா என்ற கௌரவச் சிக்கல் இதில் அவர்களுக்கு உள்ளது. இன்னொன்று, வங்கத்தில் இருந்து வந்த விஜயனின் வம்சமாக இருப்பதால் அவர்கள் இலங்கையில் 'வந்தேறு குடிகளாக' அடையாளப்படுத்தப்படுவர் என்பது. இதனால் 'மண்ணின் மைந்தர்கள்' என்ற அவர்களின் புனைவுக்கு இது தடையாக அமையும். ஆதலால் இவற்றுக்கு மேலாக புதியதொரு வரலாற்றைப் படைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. அதற்காக அவர்கள் கையில் எடுத்துக் கொண்ட நபர்தான் இராவணன்.

இராவணனை சிங்களவன் ஆக்குவதன் மூலம் மகாவம்சத்துக்கு மேலாக சுமார் 5 ஆயிரம் ஆண்டுகள் வரலாற்றுப் பின்னணியைக் கொண்டவர்கள் நாம் என்ற அந்தஸ்து அவர்களுக்குக் கிட்டும். இராவணனை தமது முப்பாட்டனாகக் கொள்வதன் மூலம் முழு இலங்கைக்கும் தாமே பூர்வீகக் குடிகள் என்கின்ற அடையாளத்தை அடைவதே அவர்களின் இலக்கு. இராவணன் சிங்களவன் ஆக்கப்படுவதன் பின்புலம் இதுதான்.

ஆக, ஒரு கற்பிதக் காவியம் பேரினவாதிகளால் இன, மத, அரசியல் பெறுமதிகள் கொடுக்கப்பட்டு வலிந்து பற்றப்பட்டுள்ளது. அதற்கெனத் தனியான ஆதாரங்கள் இல்லாததால் கிடைக்கும் தொல்லியல் பொருள்கள் மற்றும் இடங்கள் எல்லாம் மகாவம்சத்தின் மீதும், இராவணன் மீதும் வலிந்து திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர்களின் குறிப்பாக இந்துக்களின் பற்பல தொல்லியல் இடங்களும், வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில்களும் சிங்கள பேரினவாதிகளால் ஏற்கனவே பெயர் மாற்றத்துடன் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு சிங்கள வரலாற்றுடன் புனையப்பட்டுள்ள நிலையில், இராவணனை நோக்கி விடுக்கப்பட்டிருக்கும் உரிமைக்குரல்கள் இனிவரும் காலத்தில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ள வரலாற்று அழிப்புக்கான அத்திபாரமே தவிர வேறொன்றும் இல்லை. இந்த வரலாற்று அழிப்புக்கும் அதன் மறு எழுதலுக்கும் கோத்தாபய அரசின் ஆட்சியே அவர்களுக்குப் பொற்காலம்.

# ஒரு கி.மீற்றருக்கு 10 ரூபா கட்டணம்

## தனியார் பஸ் உரிமையாளர் கோரிக்கை

கொழும்பு,ஜூலை 11

பஸ்கள் பயணிகளுடன் பயணிக்கும் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 10 ரூபா கொடுப்பனவு வழங்க வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இதுவரையில் பஸ் போக்குவரத்து துறைக்கு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசிடம் இருந்து எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்றால் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



கொரோனா வைரஸ் காரணமாக ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றுவதற்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பஸ் சங்கம் அதற்கு தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# தாயின் கருவிலேயே கொரோனா தொற்றலாம்

கொழும்பு,ஜூலை 11

தாயின் கருவில் இருக்கும்போதே குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றலாம் என்று இத்தாலியில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பிறந்த இரண்டு குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருந்தமையை அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

தொப்புள்கொடியின் குருதி, நஞ்சுக் கொடி மற்றும் தாய்ப்பாலின் மாதிரிகள் மூலம் ஆய்வு செய்த மருத்துவர்கள் கொரோனா வைரஸின் அறிகுறிகளைக் கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து பெண்கள் அச்சமடையக் கூடாது. வழி காட்டல்களை உருவாக்குதல் அல்லது பாதுகாப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று ஆய்வுக் குழுவின் தலைவரான மிலான் பல்கலைக்கழகத்தின் தொற்று நோய் நிபுணர் பேராசிரியர் கிளேடியோ பெனிசியா தெரிவித்துள்ளார்.

கர்ப்பம் தரிப்பதற்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்றிய பெண்கள் தொடர்பாக கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்கா, பிரேசில், இந்தியா ஆகிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றிய நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# ரஷ்யாவிலிருந்து 266 பேர் மீட்பு

கொழும்பு,ஜூலை 11

கொரோனா பரவல் காரணமாக ரஷ்யாவில் சிக்கித் தவித்த 266 இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை நாடு திரும்பினர்.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் இவர்கள் அனைவரும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களில் பெரும்பாலானவர்கள் உயர் கல்விக்காக அந்த நாட்டில் தங்கியிருந்தவர்களாவர்.

யு.எல்.1206 என்ற விமானம் மூலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 11.15 மணிக்கு இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# 12 இலட்சம் மாணவர்களுக்கு இலவச உலர் உணவுப்பொதி

கொழும்பு,ஜூலை 11

பாடசாலை மாணவர்கள் 12 இலட்சம் பேருக்கு இலவச உலர் உணவுப் பொதி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை பகலுணவு வழங்கப்பட்ட பாடசாலைகளுக்கு இந்தப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த காலங்களில் பகல் உணவு வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. மீண்டும் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# ஐ.தே.கவுக்கு உள்ள ஒரேவழி பெரமுனவுடன் இணைவதே!

## கைகோர்ப்போம் வாருங்கள் என்கிறார் மஹிந்த



கொழும்பு, ஜூலை 11

**பொதுத்தேர்தலில் வெற்றி பெறும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணையுமாறு, தனித்து போயுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.**

கேகாலை மாவட்டத்தின் தெதிகம பகுதியில் மக்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிகொத்தவை கைப்பற்றும் கட்சிக்கு அல்ல அரசின் அதி காரத்தை கைப்பற்றும் கட்சிக்கு இந்தமுறை தேர்தலில் தங்கள் பெறுமதியான வாக்குகளை வழங்குங்கள்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவது யார் என்பதனை நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சஜித் தலைமையிலான அணி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிடுகின்றது. அதிகளவான அணியினர் தன்பக்கமே உள்ளனர் என்றும் சஜித் அணி கூறி வருகின்றது. இந்த நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார். (த)



# தனியாள் இடைவெளி இன்றி பிரதமரின் பரப்புரையில் மக்கள்

கொழும்பு, ஜூலை 11

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கேகாலையில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பொதுமக்கள் தனியாள் இடைவெளி இன்றியே அமர்த்தப்பட்டிருந்தனர்.

பிரதமரின் ஊடகப்பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்புடனான படங்களில் பொதுமக்கள் தனியாள் இடைவெளி இன்றி அமர்ந்திருக்கின்றமையை அவதானிக்க முடிந்தது.

இந்த பரப்புரை கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தாரக பாலசூரிய ஆகியோரும் இணைந்திருந்தனர் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த)

*வீட்டுத் திட்டத்தில் நிதி மோசடி:*

# குற்றச்சாட்டுகளிலிருந்து நால்வரும் விடுதலை


கொழும்பு, ஜூலை 11

ராடா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டிரான் அளஸ் உட்பட 4 பேரை, அனைத்து குற்றச்சாட்டு களிலிருந்தும் விடுவிப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் வீட்டுத் திட்டமொன்றில் நிதி மோசடி இடம்பெற்றதாகக் கூறி ராடா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டிரான் அளஸ் உட்பட 04 பேருக்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே ராடா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டிரான் அளஸ் உட்பட 04 பேரையும் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகளை சீரமைப்புச் செய்வதற்காக ராடா நிறுவனத்துக்கு பொது கருவூலகத்திலிருந்து வழங்கப்பட்ட 20 கோடி ரூபா நிதியை மோசடி செய்தனர் என இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது. (த)



# இடி மின்னலால் சேதமானது கட்டடம்

மன்னார், ஜூலை 11

மன்னார் அடம்பன் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இடி மின்னல் காரணமாக காத்தான்குளம் முறிவு தறிவு மருத்துவ நிலையத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அதனால் பொருள் சேதங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-60)



# மன்னாரில் நடைபெற்ற சர்வமதக் குழுக் கூட்டம்

மன்னார்,ஜூலை 11

மத ரீதியாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக மன்னாரில் உள்ள சர்வமதக் குழு பிரதிநிதிகளை உள்ளடக்கிய பிரதேச சர்வமத குழுக் கூட்டம் நடைபெற்றது.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் அதன் பிராந்திய இணைப்பாளர் எம்.யூ.எம் உவைஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் மன்னாரில் நடைபெற்றது.

"மத சகவாழ்வுக்கான கூட்டு ஈடுபாடு" எனும் தொனிப் பொருளில் மாவட்ட ரீதியில் காணப்படுகின்ற மத ரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு புரிந்துணர்வு மூலம் குறித்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக கலந்தாலோசிக்கும் முகமாக இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது

நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள் உட்பட அரச அலுவலர்கள், கிராம அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-60)

# தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ஆங்கில பாடச் சித்தி வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடக்கு மாகாண தொழில்நுட்ப சேவையில் உள்ள அலுவலர்கள் நியமனம் வழங்கப்பட்டு 5 வருட காலத்தினுள் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டுமென மாகாண பிரதி பிரதம செயலாளர் ஆர்.எஸ். துரைராஜா, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

தொழில் தேர்ச்சி தொடர்பாக தொழில்நுட்பவியல் சேவை தரம் III இல் ஐந்து வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க.பொ.த. சாதாரண தரப், பரீட்சையில் திறமைச் சித்தி தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இந்தச் சேவைப் பிரமாணம் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் (2013.06.01) வகுப்பு III இல் உள்வாங்கப்பட்ட அலுவலர்கள் ஆங்கில மொழித் தேர்ச்சியைப் பெற்றிருப்பினும் அவர்களது. பரீட்சைப் பெறுபேற்றை அனுப்பிவைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

# அரசவேலைகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடாதீர்!

## இடதுசாரி முன்னணி கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 11

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அரச வேலைகளுக்கு மட்டுமே இளையோர் முன்னுரிமை கொடுக்கின்றனர். அந்த மனோநிலை மாறவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக முன்னணியின் யாழ்.கிளிநொச்சி அமைப்பாளரும் முதன்மை வேட்பாளருமான டேவிட் நவரட்ணராஜ் தெரிவித்தார்.

அவருடைய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அவருடைய கட்சி அலுவலகத்தில் நேற்று வெளியிடப்பட்டது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச வேலைகளுக்கு மட்டுமே இளையோர் முன்னுரிமை கொடுக்கின்ற மனோநிலை மாறவேண்டும். அதற்கு தனியார் தொழில் துறைகள், கைத்தொழில் நிலையங்கள் உருவாக்கப்பட்டு புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப் படவேண்டும். ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இன்மையால் போதைப்பொருள் பாவனைக்கு ஆளாகின்றனர். சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலை ஆகியனவற்றை மீளக்கட்டியெழுப்பி இளையோருக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது எமது முக்கிய பணியாக இருக்கும்-என்றார். (த-20)

# விலகிய பொலிஸார் மீண்டும் சேவைக்கு!



**கொழும்பு,ஜூலை 11**
**இலங்கை பொலிஸ் சேவை விலகல் கட்டளை வழங்கியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை மீளவும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இலங்கை பொலிஸ் சேவை (விசேட அதிரடிப்படையினர் உள்ளடங்கலாக) விலகல் கட்டளை வழங்கியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்தல் தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு அமைவாக குறித்த உத்தியோகத்தர்களை மீளவும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான செயன்முறைகள் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்த விவரங்கள் www.defence.lk மற்றும் www.police.lk ஆகிய இணையத்தளங்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு பொலிஸ் சேவை விலகல் கட்டளை வழங்கியுள்ள உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேபனை மனு சமர்ப்பிப்பதற்காகப் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்ட அறிவித்தல் கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதி வெளியான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கை பொலிஸ் சேவை விலகல் கட்டளை வழங்கியுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை மீளச் சேவையில் இணைப்பதற்கான ஆட்சேபனை மனு கோரப்பட்டு வருவதுடன், குறித்த ஆட்சேபனை மனுக்களை இந்த மாதம் 17 ஆம் திகதிவரை மேலதிக செயலாளர்(சட்டம் மற்றும் ஒழுங்கு), பாதுகாப்பு அமைச்சு, 14 ஆவது மாடி, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரியில் சமர்ப்பிக்க முடியும் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

## காக்கைதீவில் பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு,ஜூலை 11
கொழும்பு 15 மட்டக்குளி பகுதியில் உள்ள காக்கைதீவுப் பகுதியில் இன்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
இந்தப் பகுதியில் வசிக்கும் பொது மக்கள் சிலருக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனா பரவலையடுத்து கொழும்பு பகுதியில் முதல் தடவையாக வெளியிடமொன்றில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கை இது வாகும். இதனை கொழும்பு மாநகர சபையின் சுகாதார திணைக்களம் மற்றும் மட்டக்குளி மாநகர சபை உறுப்பினர் சிதம்பரம் மனோகரன் மற்றும் லயன்ஸ் கழகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஆட்டை வெட்டியவர் தலைமறைவு

கொடிகாமம், ஜூலை 11
வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட குட்டி போடும் நிலையில் இருந்த ஆடு ஒன்றை வெட்டிக் கொலை செய்த நபர் தலைமறைவாகியுள்ளார் என உரிமையாளரினால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வரணிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. முறைப்பாட்டைத் தொடர்ந்து கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி3-159)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
இதன்படி நாளை ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** கரணவாய், நாவலர்மடம், தூதாவளை, நெல்லியடி, கரவெட்டி, சக்களாவத்தை, இரும்பு மதவடி, வதிரி, திக்கம், மனோகரா, சித்தி விநாயகர் கோவிலடி பிரதேசம், தேவரையாழி, உடுப்பிட்டி, நெல்லியடி பொலிஸ் நிலையம், நெல்லியடி சந்தை, றூபின்ஸ் வைத்தியசாலை, நெல்லியடி கார்கில்ஸ் பூட் சிற்றி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், இலங்கை வங்கி நெல்லியடி, பலாலி வீதி திருநெல்வேலி சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரை, திரு நெல்வேலி, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி, அத்தியடி, வீரமாகாளி கோவிலடி, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பார்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்றெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், பிறைவேற் லிமிற்றெட், டம்றோ பலாலி வீதி, ஆகிய இடங்களிலும்,
**மன்னார் மாவட்டத்தில்** நீலமடுவிலிருந்து சிலாவத்துறை யூடாக அரிப்பு வரை, சிலாவத்துறை கடற்படைமுகாம், கொக்குபடையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி,
முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம், கடற்படைமுகாம், சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களில், சிறுநாவற் குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் கூல்மென் ஐஸ் தொழிற்சாலை,
அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கல்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், புட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் **காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணிவரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும்** மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இன்றைய நாள்



**மேடம்:** கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் இக்கட்டான சூழலில் சகஊழியர்கள் தரும் ஒத்துழைப்பால் நிம்மதி கிட்டும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு உண்டு.

**இடபம்:** உறவினர் சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வீட்டைப் புதுப்பித்துக் கட்டுவீர்கள். பெண்களின் பயம் நீங்கும்படியான மாற்றங்கள் நிகழும்.

**மிதுனம்:** பிள்ளைகளால் மகிழ்ச்சி தரும் செய்திகள் வரும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். பெண்கள் தங்களின் பொறுப்பு அறிந்து நடந்து கொள்வர்.

**கடகம்:** கடந்த சில நாளாக இருந்த பிரச்னைகள் குறைந்து மனம் லேசாகும். அலுவலகத்தில் கடினமான பணிகளை செய்து மேலதிகாரியிடம் பாராட்டைப் பெறுவீர்கள். மனைவியின் உணர்வுக்கு மதிப்பளிப்பீர்கள்.

**சிம்மம்:** அலுவலகத்தில் அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் சில நேரத்தில் உங்களுக்கு எதிராகவே மாறலாம். வியாபாரிகள் வாக்கு வாதங்களை தவிர்க்க வேண்டும்.

**கன்னி:** பிள்ளைகளால் மன உளைச்சல் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் இருந்த நிம்மதியற்ற சூழ்நிலை மாறும். எதிலும் சிந்தித்து செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

**துலாம்:** முன்னேற்றப் பாதையில் அடிஎடுத்து வைப்பீர்கள். மனைவியை அனுசரித்து செல்வது நல்லது. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் உங்களை தேடிவரும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சுபச்செலவுகளை செய்வீர்கள். அலுவலகத்தில் எடுக்கும் புதிய முயற்சிக்கு மேலதிகாரியின் ஆதரவு இருக்கும். உதவிகள் கிடைக்கும்.

**தனுசு:** வேலையில் சகஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைப்பதால் பணிச்சுமை குறையும். உறவினர் மத்தியில் உங்களின் செல்வாக்கு கூடும். அக்கம் பக்கத்தினருடைய ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:** பெண்களுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். கலைத்துறையினரின் செல்வாக்கு உயரும். சுபநிகழ்ச்சி ஏற்பாடுகளால் வீடு களைகட்டும். குடும்பத்தினரின் உணர்வுகளுக்குமதிப்பளிப்பீர்கள்.

**கும்பம்:** மனதில் இருந்த அவநம்பிக்கை நீங்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சி தரும் நிகழ்வுகள் நடைபெறும். தர்மச் செயல்களை செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** கவலைகள் மறைந்து புதிய நம்பிக்கை பிறக்கும். நண்பர்களால் நன்மை கூடும். கலைஞர்கள் பலகாலம் கிடப்பில் போட்டிருந்த வேலைகளை முடிப்பதில் ஆர்வம் காட்டுவர்.





## ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா

மன்னார்,ஜூலை 11
நானாட்டான் பங்கின் தாய்க்கோயிலான புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
காலை 7.15 மணியளவில் பேசாலை பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.கே. தேவராஜா கொடுதோர் அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.
திருப்பலியில் மூத்த குரு அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார், மன்னார் மறைமாவட்ட இளைஞர் வழிபாட்டு ஆணைக்குழுக்களின் இயக்குநர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளார், கட்டைக்காடு பங்குத் தந்தை அருட்பணி. எமில் எழில்ராஜ் அடிகளார் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-56)

# கருத்தமர்வுக்கு சென்றோருக்கு ரூ.200 'ரீலோட்'

தென்மராட்சி,ஜூலை 11
விழிப்புணர்வுக் கருத்தமர்வின் நிறைவில், அதில் கலந்து கொண்டவர்களின் அலைபேசிகளுக்கு 200 ரூபா மீள் நிரப்புச் செய்யப்பட்ட சம்பவம் வரணியில் இடம்பெற்றுள்ளது.

போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்குவதற்குப் பதிலாகவே அலைபேசிகளுக்கு மீள்நிரப்புச் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
குடும்பத் தலைவர் அல்லது தலைவி வெளிநாடுகளுக்குச் சென்ற பின்னர் அந்தக் குடும்பத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், குடும்பக் குலைவுகள், தொடர்பான ஆலோசனைகள், உதவிகள் பெறுதல் போன்றவை தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு ஒன்று நேற்று முன்தினம் வரணி இயற்றாலை சனசமூக நிலையமொன்றில் நடைபெற்றது. ஐ.ஓ.எம். நிறுவனத்தின் ஏற்பாட்டில். சமூக இடைவெளியைக் கருத்தில் கொண்டு 25 பேர் மட்டும் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கருத்தமர்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல சேவையாளர், மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இக் கருத்தமர்வின் இறுதியில் வழங்கப்படும் கொடுப்பனவுக்குப் பதிலாகவே அவர்களின் அலைபேசிகளுக்கு உரிய தொகையை மீள் நிரப்பல் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## சீரமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் சீரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் திருமதி வாசுகி தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் ஆணையாளரும், கிழக்கு மாகாண பிரதம செயலரும் பழைய மாணவருமான வே. பொ.பாலசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## மானிய உரத்துக்கான பதிவுகள் இன்று

சாவகச்சேரி,ஜூலை 11
தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு, காலபோக நெற்செய்கைக்கான மானிய உர விநியோகத்துக்கான பதிவுகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் உள்ள வி. சதானந்தத்தின் இல்லத்தில் இடம் பெறும்.
அமைப்பின் அங்கத்தவர்கள் இந்த வருடத்துக்கான ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் வே. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (க-9)

## முன்னாள் போராளியின் உடல் வியாழன்று அடக்கம்

கிளிநொச்சி, ஜூலை 11
இயக்கச்சி வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து உயிரிழந்த முன்னாள் போராளியான தங்கராசா கங்கை ஆத்மனின் (வயது-43) உடல் நேற்றுமுன் தினம் மாலை அடக்கம் செய்யப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சியில் உள்ள புளியடி சந்திக்கு அருகாமையில் கடந்த 3ஆம் திகதி மாலை 7.30 மணியளவில் வெடிச்சத்தம் கேட்டுள்ளது. அதனையடுத்து சத்தம்கேட்ட வீட்டிலிருந்த குடும்பத் தலைவர் கைகள், கால்கள் மற்றும் முகம் உள்ளிட்ட பகுதிகளில் எரிகாயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4.50 அளவில் உயிரிழந்துள்ளார்.
அவர் உள்ளூர் வெடிகுண்டுகளை தயாரித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன் வெடிகுண்டுகளும் மீட்கப்பட்டிருந்தன. சம்பவம் தொடர்பில் அவருடைய மனைவி உட்பட மூவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். பின்னர் மனைவி தவிர்ந்த மற்றைய இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.
பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ள உயிரிழந்தவரின் மனைவி நேற்றுமுன்தினம் இறுதிச் சடங்கில் பங்கு பற்றும் நோக்கில் அங்கு அழைத்துவரப்பட்டிருந்தார். கிரியைகள் நிறைவடைந்த பின்னர் மாலை 7 மணியளவில் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.
அவர் முன்னாள் போராளி. மறுவாழ்வளிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு குடும்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளார். 2013 ஆம் ஆண்டு திருமணம் முடித்துள்ளார். அவர் நிரந்தர தொழில் இன்றி வாழ்ந்து வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-6)

## களவாக அறுக்கப்பட்ட பாலை மரங்கள் மீட்பு

முல்லைத்தீவு,ஜூலை 11
முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகாமம் வனப்பகுதியில் சட்ட விரோதமாக அறுக்கப்பட்ட ஒரு தொகுதி பாலை மரங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன. அவை வனப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
அம்பகாமம் வன பகுதியில் சட்டவிரோதமாக அறுக்கப்பட்ட ஒரு தொகுதி மரங்களே இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்டன.
குறித்த பகுதியில் சட்டவிரோதமாக மரங்கள் அறுக்கப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து, கடந்த புதன்கிழமை அங்கு சென்ற இராணுவத்தினரும், வன அதிகாரிகளும் ஒரு தொகுதி மரங்களைக் கைப்பற்றினர். அந்தப் பகுதியில் நின்ற இருவரைச் சந்தேகத்தில் கைது செய்தனர்.
அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் 64 ஆவது படைப்பிரிவின் கீழ் இயங்கும் 642 ஆவது படைத் தலைமையகத்தில் 23 ஆவது விஜயபாகு ரெஜிமென்ற் படை அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை முதல் அந்தப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.
அங்கு அறுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
4 மிகப்பெரிய பாலை மரங்கள் அறுத்து விழுத்தப்பட்டு தீராந்திகளாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. அவை வனவள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-19)



## சாரதிகள் 7 பேருக்கு ரூ 2,50,000 தண்டம்

சாவகச்சேரி,ஜூலை 11
மதுபோதையில் வாகனம் செலுத்திய ஏழு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## கருத்தமர்வு

சாவகச்சேரி, ஜூலை 11
கொடிகாமம் பிரதேச வர்த்தகர்களுக்கான கொரோனா, டெங்கு, சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கொடிகாமம் வணிகர் மன்றக் கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது.
வணிகர் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. அருள்குமரன் கருத்துரை வழங்கினார். (த-9)

## அபிவிருத்தி அலுவலர்கள் மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

கொடிகாமம், ஜூலை 11

சாவகச்சேரியிலிருந்து யாழ்நகர் நோக்கிய திசையில் ஏ-9 வீதியூடாக நடைப்பயிற்சியில் ஈடுபட்ட இரு தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர்கள் மீது அவர்கள் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிளோட்டி மோதி விபத்துக்குள்ளானதில் அவர்கள் மூவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் நுணாவில் பொது நூலகத்திற்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த, பவளராசா பாஸ்கரன் (வயது 43), சண்முகராசன் பிரதீபன் (வயது 38) ஆகியோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருவதுடன், மூன்றாவது நபரான சின்னத்தம்பி மதீஸ்வரன் (வயது 48) என்பவர் கால்முறிந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி3-9.159)

### நாத்தாண்டியாவைச் சேர்ந்த

## பத்து குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

புத்தளம், ஜூலை 11

நாத்தாண்டியாவைச் சேர்ந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தினுஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் மையத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசணை வழங்கும் பெண் உத்தியோகத்தருடன் தொடர்பைப் பேணியவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்ணின் தொடர்புகளை மேலும் அடையாளம் காண சுகாதார அதிகாரிகள் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

# விஜயன் இலங்கைக்கு வரும்போதே இங்கு பஞ்ச ஈச்சரங்கள் இருந்தன

### மேதானந்த தேரர் உண்மையை உணரவேண்டும் என்கிறது சைவ மகா சபை



**திருக்கோணேச்சரம் மற்றும் நல்லூர் முருகன் ஆலயம் என்பன தொடர்பாக எல்லாவல மேதானந்த தேரர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் சைவத்தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தியுள்ளன எனத் தெரிவித்துள்ள அகில இலங்கை சைவ மகா சபை, இலங்கைக்கு பௌத்த சமயம் கொண்டுவரப்படும் முன்னரே இங்கு சிவ வழிபாடு இருந்தது என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.**

கிழக்கு தொல்லியல் செயலணிக்கு நியமிக்கப்பட்ட மேதா னந்த தேரர் சமீப காலமாக சைவ ஆலயங்கள் தொடர்பாக வெளியிட்டுவரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அகில இலங்கை சைவ மகா சபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர்களுடையதும் இலங்கையினுடையதும் பூர்வீக புராதன சமயமான சைவத்தினுடைய ஆதி வழிபாட்டு இடமும் பாடல் பெற்ற தலமும் மாமன்னன் இராவணனுடைய காலத்திலேயே இருந்த ஈச்சரமுமான திருக்கோணேச்சரத்தை விகாரை அமைந்திருந்த இடம் எனவும் நல்லூர் முருகன் ஆலயம் தொடர்பாகவும் மேதானந்த தேரர் வெளியிட்டுள்ள கருத்துகள் சைவத் தமிழர்களை மிகவும் மனவேதனைக்கு உள்ளாக்கி உள்ளன.

இராவண் வெட்டு போன்ற மிகப் பண்டைய அடையாளங்களையும், பின்னர் குளக் கோட்ட மன்னனுடைய திருப்பணி செய்திகளைக் கொண்டதும் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே தாய் தமிழகத்திலேயே பெரிதும் அறியப்பட்டு போற்றப்பட்ட திருக்கோவிலாக இருந்தமையால் அங்கிருந்தே திருஞான சம்பந்த நாயனாரால் பாடல் பெற்ற தலமாகவும் திருக்கோணேச்சரம் விளங்குகின்றது.

திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பட்ட இந்த நாட்டில் ஒரு காலத்தில் சிவ வழிபாடு மட்டுமே எங்கும் பரந்து வியாபித்து இருந்தது. பின்னர் காலத்திற்கு காலம் அந்நியர் வருகைகளால் ஏற்பட்ட மத மாற்றங்கள் காரணமாக பல மதங்கள் தோற்றுவிக்கப்பட்டு சைவத்தின் பல புராதன சிவாலயங்கள் அழிக்கப்பட்டன. இதே போன்று சைவத் தமிழ் மக்களுடைய வாழ்விடங்கள் பறிக்கப்பட்டன.

இத்தனை அநீதிகள் நடைபெற்ற போதிலும் அவற்றை மீள உரிமை கோரி மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கா மல் இருக்கும் ஒரு மக்கள் குழு மத்தை மீண்டும் மீண்டும் அனை வரும் சீண்டிப் பார்ப்பது எம் மக்களின் மனங்களில் ஆறாத் துயரை தோற்றுவிக்கின்றது.

அத்துடன், இலங்கையில் குடியேறி சிங்கள இனத்தை தோற்றுவித்த விஜயன் வருகையின் போதே திருக்கோணேச்சரம் உள்ளிட்ட பஞ்ச ஈச்சரங்கள் இங்கு இருந்தன எனவும் அங்கு சென்று விஜயன் வழிபட்டதாகவும் மகாவம்சமே ஒப்புக்கொள்கின்றது. மூத்த சிவனின் மகனாகிய தேவநம்பிய தீசன் கி.மு 243 இல் பௌத்த மதத்திற்கு மதம் மாறும் வரை இலங்கை முழுவதும் சைவ சமயமே பின்பற்றபட்டது என்ற வரலாற்று உண்மையை எல்லாவெல மேதானந்த தேரர் மனங்கொள்வது நல்லது.

எனவே, இவ்வாறான கருத்துக்களை தொடர்ந்து வெளிப்படுத்துவதை மேதானந்த தேரர் நிறுத்திக் கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன், உண்மையையும் மத நல்லிணக்கத்தையும் நேசிக்கும் அனைவரும் நாட்டின் பூர்வீக குடிகளான சைவத் தமிழர்களின் வழிபாட்டு தொன்மங்களை பாது காக்க உரத்து குரல் கொடுக்க வேண்டும் எனவும் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 11

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வரையில் மேலும் 4 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் குறித்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், இடம்பெற்று வரும் விசாரணைகள் நிறைவடையாதுள்ளமை காரணமாக, அதன் அதிகார காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# அல்வாய் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய மணவாளக்கோல திருவிழா நாளை

### *20ஆம் திகதி வருடாந்த உற்சவம் ஆரம்பம்*

யாழ்ப்பாணம்,ஜூலை 11

வடமராட்சி, அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மணவாளக்கோலம் (கும்பாபிஷேகம்)நாளை ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக அபிஷேகங்களுடன் நடைபெறும். தொடர்ந்து அன்னை உள் வீதி வலம் வருவார். ஆனாலும் வழமையான பாற்குடபவனி,அன்னதானம் இடம்பெறமாட்டா.

- இவ்வாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். இதுகுறித்து அடியார்களுக்கு சபையினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாளை ஞாயிறு நடைபெறும் மணவாளக் கோல உற்சவத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை வருடாந்த உற்சவம்நடைபெறவுள்ளது. எனினும்கொரோனா அச்சம் தொடருகின்றமையாமல் கொடியேற்றம் இடம்பெறமாட்டாது. உற்சவ நாள்களான 16நாள்களும் காலை 7 மணிக்கும் 10மணிக்கும் இடையில் அபிஷேகம் மாத்திம் இடம்பெறும்.

**வரலக் ஷ்மி விரதம்**

அதேசமயம் வரலக் ஷ்மி விரதமும் இம்முறை எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான பற்றுச்சீட்டுகளை அடியார்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனாலும் அடியார்கள் கும்பம் வைத்து பூஜை செய்வது நிறுத்தப்படுகிறது. அபிஷேகங்கள் நடைபெற்று பூஜை நிறைவடைய பற்றுச்சீட்டு ஒழுங்கில் அடியார்களுக்கு காப்புக்கள் கட்டப்படமாட்டா. காப்பு கையில் வழங்கப்படும். அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பேணி அம்பிகையை வழிபடுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.



## கை கழுவும் தொட்டிகள் கையளிப்பு

பரந்தன், ஜூலை 11

பரந்தன் இந்து மகா வித்தியாலயத்துக்கு ஆறு கை கழுவும் தொட்டிகள் உதவும் உறவுகள் அமைப்பினரால் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலையில் கை கழுவுவதற்குத் தொட்டிகள் இல்லாத நிலையில் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் தங்கராசாவின் ஞாபகார்த்தமாக இந்தத் தொட்டிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. (ரி1 - 222)

# தேசத்துரோகம் தண்டனைக்குரியது

*சம்பந்தருக்கு ஆனந்தசங்கரி கடிதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 11

நீங்கள் செய்த குற்றங்கள் பல இன்றும் நிரூபிக்கக் கூடியவை. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் தேசத் துரோகம் உட்பட பல குற்றங்கள் செய்தவராக நீங்கள் கருதப்படுவீர்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்த சங்கரியால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

உங்களைப் பற்றியும் எம்மோடு சேர்ந்த வேறு சிலர் பற்றியும் எத்தனையோ விடயங்கள் சம்பந்தமாக ஒரு விமர்சனமேனும் செய்யாது மிக அமைதியாக இருந்துவருகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் மிகவும் புத்திசாலி என்பதில் சந்தேகமே இல்லை. பல விடயங்களில் உங்களின் புத்திசாலித்தனம் உங்களுக்கே உதவியுள்ளது. ஆனால் பல விடயங்கள் எமது மக்களுக்கும் பொதுவாக நாட்டிற்கும் பெரும் அழிவையே தந்துள்ளது.

மிகவும் போற்றப்பட்டு, தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டு, மக்களாலே தொடர்ந்து பல தலைமுறைகளாக அனுபவிக்கப்பட்டு வந்த ஜனநாயகக் கோட்பாட்டிற்கு முதல் கல்லெறிந்தவர் நீங்களே. ஜனநாயகத்தை அழிப்பதற்கு முதற்கல்லை எறிந்தது மட்டுமல்ல முற்றுமுழுதாக கூட்டணியை அழிக்கவே பாடுபட்டீர்கள். நீங்கள் செய்த மிக அற்பத்தனமான துரோகங்களில் இன்னுமொன்று மன்னிக்க முடியாதளவிற்கு எம் இனத்தைப் பாதித்துள்ளது. நீங்கள் கட்சியை விட்டு வெளியேறியது 2004ஆம் ஆண்டு. அன்றிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக நடித்துக் கொண்டும் எமது கட்சியை முறையாக இயங்கவிடாது தடுத்தீர்கள். ஆனால் 2004ஆம் ஆண்டு தேர்தலில் நீங்கள் வெற்றி கண்ட முறை ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் மட்டுமல்ல, தேசத்துரோகம் உட்பட பல குற்றங்களுக்கு நீங்கள் ஆளாகியிருப்பீர்கள் என்பதை உணந்தீர்களா அல்லது உணராதது போல் நடிக்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் செய்த குற்றங்கள் பல இன்றும் நிரூபிக்கக் கூடியவை. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் தேசத் துரோகம் உட்பட பல குற்றங்களைச்செய்தவராக நீங்கள் கருதப்படுவீர்கள் - என்றுள்ளது. (ப)

# இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண புதிய ஆட்சியாளருடனும் இணைவோம்

*கூட்டமைப்பின் வேட்பாளர் வினோ கூறுகிறார்*

**மன்னார், ஜூலை 11**

**எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் அழுத்தங்களையும் எதிர்காலத்தில் வழங்கும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாங்கள் இன்று மக்கள் மத்தியிலே கொண்டு செல்கிறோம்.மக்களினுடைய ஆணையைப் பெற்று நாங்கள் பலமான ஒரு சக்தியாக ஒரு மக்கள் இயக்கமாக நாடாளுமன்றம் செல்வோம். கூட்டமைப்பு உறுதியான கொள்கைப் பாடுடன் உறுதியான எதிர்கால அரசியல் நடவடிக்கைகளைமுன்னெடுப்பதற்கு நிச்சயமாக எங்களுடைய பலம் வழிசமைக்கும். கடந்த தேர்தல் காலங்களில் மக்கள் எப்படியான ஆதரவை எங்களுக்குத் தந்தார்களோ அதே ஆதரவைத் தருவார்கள் என்ற பூரண நம்பிக்கை இருக்கிறது. பலர் சிங்கள தேசத்தினால் அல்லது தேசியக் கட்சிகளினால் திட்டமிட்டு தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பிரித்தெடுப்பதற்கு மிகவும் தந்திரமான முறையில் தமிழ் மக்களுடைய அரசியல் பலத்தை சிதைப்பதற்காக களமிறக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களைப் போல் அவர்களை மக்கள் நிராகரிக்கின்ற சந்தர்ப்பம் மீண்டும் வரும். குற்றச்சாட்டுக்கள் ஒருபுறம் இருக்கின்றன. நாங்கள் அதை மறுப்பதற்கு இல்லை. அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு போதிய விளக்கங்களை நாங்கள் கூறிக் கொண்டிருக்கிறோம். தேசிய அரசாங்கத்தை அல்லது இந்த கூட்டு அரசாங்கத்தில் நாங்கள் ஓர் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததன் காரணமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நாங்கள் பெரிய பங்களிப்பைச் செய்து இருக்கின்றோம். அது இறுதி இலக்கை அடையாவிட்டாலும் கூட இறுதி வரைக்கும் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது குறித்த விடயம் மக்களுக்குத் தெரியும். சர்வதேசத்துக்கும் தெரியும். இடையிலே அரசாங்கம் மாறியதன் காரணமாக ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் எதிர்காலத்தில் நிச்சயமாக எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் அழுத்தங்களையும் எதிர்காலத்தில் வழங்கும் - என்றார். (ப- 56)

# இளைஞருக்கு வாய்ப்பளியுங்கள்!

*தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் கோரிக்கை*

இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வினைத்திறனுடன் செயலாற்றக் கூடிய இளைஞர்களுக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்புமாறு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும் சமூக ஆர்வலருமான எஸ் . சந்திரகுமார் தெரிவித்துள்ளார் .

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கடந்த 20 வருடங்களாக நாடாளுமன்றத்தை அலங்கரித்தவர்கள் எதையுமே சாதிக்கவில்லை இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதால் நிச்சயமாக மக்கள் சிந்தித்து இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கி அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த அவர்களுக்கு வாக்களிக்கவேண்டும். இளைஞர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி னாலே அவர்கள் அரசியலில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தப்போகின்றார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும். இம்முறை இளைஞர்களின் கைகளில் கொடுத்துப் பார்த்தால் நாட்டுக்கு என்ன செய்வார்கள் என்று தெரியும். எனவே பேச்சளவில் நின்று விடாமல் செயலாற்றக் கூடியவர்கள் புதியவர்கள், இளைஞர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்- என்றார். (ப-110)

# வன்னிக்கான அமைச்சு கிடைக்கும் ஆள்தான் மாறும்

*முன்னாள் எம்.பி. மஸ்தான் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜூலை 11

வன்னி மாவட்டத்துக்கு ஒவ்வொரு முறையும் அமைச்சுக் கிடைக்கின்றது ஆள்கள்தான் மாறுகின்றனர். கடந்த மூப்பது ஆண்டுகளாக எடுத்து பார்த்தால் இதுதான் நடக்கின்றது. இந்தத் தேர்தலின் பின்னர் வன்னி மாவட்டத்துக்கு ஆள் மாறும் அமைச்சுக் கிடைக்கும் என்ற நிலைப்பாடு இருக்கின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

என்னைப்பற்றி எந்தக் கருத்தும் சொல்ல முடியாத நிலையில் மஸ்தான் வெற்றிபெறமாட்டார் என்று சொல்கின்றார்கள். கட்சித் தலைவர்கள் திட்டமிட்டு மஸ்தானைத் தோற்கடிப்பார்கள் என்று சொல்கின்றார்கள். கட்சித் தலைமை எந்த அடிப்படையில் நம்பி முதன்மை வேட்பாளராக என்னை நிறுத்தினார்களோ அந்த நம்பிக்கைக்கு ஏற்றவிதத்தில் தமிழ் மக்கள் நான் ஓர் இனவாதியல்ல நியாயமானவன் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

இதனை அறியவேண்டுமாக இருந்தால் நான் செல்லும் கிராமத்துக்கு பார்வையாளராக வந்து பார்க்கலாம். மற்றவர்கள் சொல்கின்றார்கள் மஸ்தானுக்குப் பேசத்தெரியாது என்று. பேசத் தேவையில்லை சாதித்தால் போதும் என்று நான் நினைக்கின்றேன். கடந்த காலங்களில் பல குற்றச் சாட்டுக்கள் ஜனாதிபதியின் மேல் முன்வைத்தாலும் அவரின் எட்டுமாதகால ஆட்சி எப்படி என்று உங்களுக்குத் தெரியும். மஹிந்த ராஜபக்ஷ அபிவிருத்தி மழை பொழியவேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருக்கின்றார். வன்னி மாவட்டத்துக்கு ஒவ்வொரு முறையும் அமைச்சுக் கிடைக்கின்றது ஆள்கள்தான் மாறுகின்றனர். கடந்த மூப்பது ஆண்டுகளை எடுத்துப் பார்த்தால் இதுதான் நடக்கின்றது. இந்தத் தேர்தலின் பின்னர் வன்னி மாவட்டத்துக்கு ஆள் மாறும் அமைச்சுக் கிடைக்கும் என்ற நிலைப்பாடு இருக்கின்றது - என்றார். (ப-19)

# பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் எனக்கு எந்த தொடர்புகளுமில்லை

*முன்னாள் அமைச்சர் ரிஷாத் திட்டவட்டம்*

மன்னார், ஜூலை 11

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடனோ வேறு எந்தப் பயங்கரவாதச் செயற்பாடுகளுடனோ எனக்கும் எனது குடும்பத்துக்கும் துளியளவும் தொடர்பு கிடையாதென முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

மன்னாரில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நான் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, குற்றப்புலனாய்வுப் பிரிவிலிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று கிடைக்கப்பெற்றது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் அளிக்க வருமாறு கோரப்பட்டேன். எனது தேர்தல் நடவடிக்கைகள் அத்தனையையும் இடைநிறுத்திவிட்டு, கொழும்புசென்று விசாரணைக்கு முகங்கொடுத்தேன். என்னிடம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் குறித்தே பல கேள்விகள் கேட்கப்பட்டன. குண்டுதாரி இன்ஷாபின் மாமனாரான அலாவுதீன், முன்னர் நான் பதவி வகித்த அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் எனது அமைச்சின் கீழான நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் நான் தெளிவான விளக்கங்களைக்கொடுத்தேன். என்னைப் பொறுத்தவரையில் நான் நிரபராதி. சஹ்ரானை என் வாழ்நாளில் கண்டதே இல்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் எந்தவொரு செயற்பாட்டிலும் எனக்கு துள்ளியளவும் தொடர்பு இல்லை- என்றார். (ப-56)

திருமுருகன்


6, 381 ஏக்கர் நிலம் படைகளால் பறிப்பு
உத்தியோகபூர்வ அறிவித்தல்
யாழ்ப்பாணம், ஏப்.23
வலி. வடக்கு, வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தமிழ் மக்களின் 6 ஆயி

# இமாலய சாதனைதான்!!!

வசைமாரிகளும், பசப்பு வார்த்தைகளும் அள்ளி வீசப்பட்டால் அது தேர்தல் காலம்தான். கூறப்படும் பொய்களுக்குள்ளும் உண்மைகளைத் தேடிக் கண்டுபிடித்தால்தான் வாக்காளனுக்கு வெற்றி. உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியாதவாறு பொய்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு உண்மையாக்க முயற்சிக்கப்படும்.

'கூட்டமைப்பு என்ன செய்து கிழித்தது?' இது சராசரியாக இன்று வாக்காளர்களிடமிருந்து கேள்வியாக எழுகின்றது. வாக்காளர்களிடம் இந்தக் கேள்விகளை எழச் செய்யும் அளவுக்கு கூட்டமைப்புக்கு எதிரான தரப்புக்கள் நச்சுக்களை விதைத்து இருக்கின்றார்கள்.


நீண்டகாலக் கனவு நிறைவேறியது
மயிலிட்டித்துறை 27 ஆண்டுகளின் பின் நேற்று மீட்பு

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், வாழ்வாதாரம் மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் கூட்டமைப்பு என்ன செய்தது? கூட்டமைப்பு கோலோச்சத் தொடங்கியதிலிருந்து இந்தக் கேள்விகள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எழுப்பப்பட்டுத்தான் வருகின்றது.

**காணி விடுவிப்பு**

2013ஆம் ஆண்டு. மஹிந்த ராஜபக்ச அரசு சர்வ அதிகாரங்களுடன் ஆட்சியிலிருந்தது. அவரது அமைச்சரவையில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா அமைச்சுப் பதவி வகித்துக் கொண்டிருந்தார்.

வளம்கொழிக்கும் வலி.வடக்கு மண்ணில் ராணுவம் ஆக்கிரமித்து உயர் பாதுகாப்பு வலயமாக வைத்திருந்த 6ஆயிரத்து 381 ஏக்கர் நிலப் பரப்பு அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி அரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரிக்கப்பட்டது. 30 ஆண்டுகளாக தாய் நிலம் திரும்ப ஏக்கத்துடன் காத்திருந்த மக்களுக்கு பேரதிர்சியளித்தது அரசின் முடிவு. தாம் புரண்டு, தவழ்ந்து, வளர்ந்து, கூடிக் குலாவிய சொந்த மண் தங்கள் கைகளுக்கு கிடைக்கவே கிடைக்காது என்ற விரக்தியின் உச்சத்துக்கு மக்கள் சென்றனர். அரசின் இந்தச் சுவீகரிப்பு முடிவை எதிர்க்க வக்கற்றவராகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையிலிருந்தார். அரசுக்கு சாமரம் வீசுபவராக இருந்தார். தன்னுடன் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்தச் சமயத்தில் வைத்திருந்த அவர் அதனைப் பணயமாக வைத்துக் கூட அரசை மிரட்டி, பேரம் பேசுவதைக்கூடச் செய்யாமலிருந்தார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டங்களை தானும் பங்கேற்று நடத்தியது. வழக்குகளையும் தாக்கல்செய்தது. நில விடுவிப்புக்காக போராடிய மக்கள் மீது கழிவு ஒயில் ஊற்றி, கற்களால், இரும்பு ஆணிகளால் தாக்குதல் நடத்த புலனாய்வுத் தரப்புக்கள் தவறவில்லை.

**விடிவு**

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்தவின் வெற்றிக்காக தமிழ் மக்களின் வாழ்விடங்களைப் பறித்து தமிழர்களை ஏதிலிகளாக்கிய டக்ளஸ் தேவானந்தாவும், அங்கஜன் இராமநாதனும் தலையால்கிடங்கு கிண்டினர். ஆனால், தமிழ்க் கூட்டமைப்பு காட்டிய சரியான திசையில் மஹிந்தவை எதிர்த்து நின்ற மைத்திரிபாலவுக்கு தமிழர்கள் வாக்களித்தனர்.

இந்தத் துன்பங்களுக்கு 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் வழிகோழியது. தங்கள் கையைவிட்டுப் பறிபோய்விட்டது என்று கருதியிருந்த காணிகள் கொஞ்சம்கொஞ்சமாக மக்கள் கைகளுக்கு கிடைக்கத் தொடங்கின. ஆமை வேகத்தில் என்றாலும் நகரத் தொடங்கியது. 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதியிலிருந்து 2019ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 4 ஆயிரத்து 47.37 ஏக்கர் நிலப்பரப்புக்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவித்து சுவீகரித்த காணிகளும் இதில் உள்ளடங்குகின்றன. 2019ஆம் ஆண்டு ராஜபக்ஷாக்கள் ஆட்சித் தரப்பாகிய பின்னர் ஒரு இஞ்ச் நிலம் கூட விடுவிக்கப்படவில்லை.

கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளும் கட்சியில் இணைந்து இணக்க அரசியலோ, சரணாகதி அரசியலோ நடத்தாது, எதிர்க் கட்சியிலிருந்தே இவ்வளவற்றையும் சாதித்தது.

காணி விடுவிப்பின் மைல் கல்லாக மயிலிட்டி, மயிலிட்டித்துறைமுகம் ஆகியன விடுவிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்ட முடியும். இலங்கையின் மொத்த மீன்பிடியில் மூன்றிலொரு பங்கு பங்களிப்பை மயிலிட்டித் துறைமுகம் 1981ஆம் ஆண்டு செய்திருந்தது. இது விடுவிக்கப்பட மாட்டாது என்றே மக்கள் எண்ணியிருந்தனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்தப் பகுதி மக்களை வளலாயில் குடியேற்றுவதற்கு கூட நடவடிக்கை எடுத்திருந்தார். ஏன் நல்லாட்சி அரசு அமைந்த பின்னர், அந்த அமைச்சில் இராஜாங்க அமைச்சராக இருந்த திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூட மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்படாது என்றே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூறியிருந்தார்.


24 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த
வலி. வடக்குக் காணிகளை நிரந்தரமாகப் பறிக்க முடிவு

அப்படிப்பட்டதொரு நிலையில், மயிலிட்டித்துறைமுகத்தை கூட்டமைப்பு மீட்டெடுத்து மக்களிடம் கொடுத்தது. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதைப் போல, கூட்டமைப்பு தனது 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற பலத்தைக் காண்பித்து மயிலிட்டித் துறைமுகத்தை விடுவித்தது. கூட்டமைப்பின் நகர்வுகளில் இதனை இமாலயச் சாதனை என்று சொல்வதில் தவறில்லை.

> **"மயிலிட்டித்துறை முகத்தை கூட்டமைப்பு மீட்டெடுத்து மக்களிடம் கொடுத்தது. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதைப் போல, கூட்டமைப்பு தனது 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற பலத்தைக் காண்பித்து மயிலிட்டித் துறைமுகத்தை விடுவித்தது. கூட்டமைப்பின் நகர்வுகளில் இதனை இமாலயச் சாதனை என்று சொல்வதில் தவறில்லை.**

கூட்டமைப்பு அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், அமைச்சுப் பதவியைப் பெற்றவர்களால் மீட்டுக் கொடுக்க முடியாத நில உரிமையை, உரித்தை மீட்டுக் கொடுத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருந்ததாலேயே அதனைச் சாதிக்க முடிந்தது. நல்லாட்சி அரசுடன் பேரம் பேச முடிந்தது. நல்லாட்சி அரசுக்கு முட்டுக் கொடுத்தது கூட்டமைப்பு என்று பல அரசியல் கட்சிகளும் சொல்கின்றன. முட்டுக் கொடுத்து தமக்கான நலன்களை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்று வாய் கூசாமல் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதைப் போல கூட்டமைப்பு நல்லாட்சிக்கு முட்டுக் கொடுத்ததாகவே இருக்கட்டும். அவர்கள் காணிகளை விடுவித்துக் கொடுத்தமைதான், அவர்கள் தங்களுக்கு தனிப்பட பெற்ற நலன்களாகவே இருக்கட்டும். அதனால் உங்களுக்கு என்ன செய்கின்றது? அவர்களின் பலத்தைச் சிதைத்து நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள். மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரித்துக்களை தடுக்கத்தான் போகின்றீர்கள்.

உங்கள் உரித்துக்களை நீங்களே இழப்பதற்கு உதிரிகளுக்கா வாக்களிக்கப் போகின்றீர்கள்?


27 ஆண்டுகளின் பின் மயிலிட்டித் துறை திங்களன்று விடுவிப்பு

# அரசுக்கு தகுந்த பதிலடியை அரச அலுவலர்கள் வழங்குவர்

## ரஞ்சித் மத்துமபண்டார நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 11



**அரச அலுவலர்கள் மீது அரசாங்கம் அக்கறையின்றிச் செயற்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரச அலுவலர்கள் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச ஊழியர்களின் நலன் கருதி நல்லாட்சி அரசாங்கம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது.

அரச சேவையாளர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து அதனை ஆட்சியமைத்து ஒருமாத காலத்துக்குள் வழங்கியும் காண்பித்திருந்தோம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிக்காலங்களில் அரச அலுவலர்களின் சம்பளத்தை 2,500 ரூபாவால் அதிகரிப்பதாக தெரிவித்து வந்தபோதிலும் அதனை நிறைவேற்றவில்லை.

அரச நிர்வாகப் பிரிவினருக்கு பெரிதும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ள அரசாங்கத்தினர் மீது அரச ஊழியர்கள் தகுந்த பதிலடியைக் கொடுக்க வேண்டும். கொவிட் -19 வைரஸ் பரவலை காரணங்காட்டி அரச ஊழியர்களின் சம்பளத்தையும் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

எமது ஆட்சியில் நாங்கள் மின்சாரம் மற்றும் நீருக்கான கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுத்திருந்தோம். ஔடதங்களின் விலை, எரிபொருள் விலை என்பவற்றை குறைக்க நடவடிக்கை எடுத்திருந்தோம். ஒரு வருடத்துக்கான மின் கட்டணத்தை இரு மாதங்களிலே பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இந்நிலையில் தபால் மூல வாக்களிப்புகள் எதிர்வரும் வாரங்களில் இடம்பெறவுள்ளன.

இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அரச அலுவலர்கள் தகுந்த பதிலடியைக் கொடுக்கும் வகையில் வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# 3 கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இணக்கம்

## டக்ளஸ் அறிவிப்பு

வவுனியா,ஜூலை 11

ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளுக்கிடையில் பெரியளவில் கொள்கை கோட்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் இல்லை இதனால் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈரோஸ் மற்றும் ஈ.பி.டி.பி கட்சிகள் இனிவரும் காலங்களில் இணைந்து செயற்படுவது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்,. ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளுக்கு இடையில் பெரியளவில் கொள்கை கோட்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் இல்லை. அந்தக் காலகட்டத்தில் தலைமைகளுக்கிடையில் ஏற்பட்ட வேறுபாடுகள் காரணமாகப் பிரிந்து வெவ்வேறு அமைப்புகளாகச் செயற்பட்டனர். இந்த நிலையில ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நீண்டகாலத்தின் பின்னர் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் தற்போது ஏற்பட்டுள்ளன. எனவே இனிவரும் காலங்களில் எமக்குள் விட்டுக் கொடுத்து, செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். கிழக்கு மாகாண விசேட செயலணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்புக்கு இடம்கொடுப்பதற்கு அரசு இணங்கியிருக்கின்றது. எனினும் அதில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் விதமாக சில ஊடகங்கள் மற்றும் அரசியல் வாதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனவே அந்தச் செயலணிக்கு நியமிப்பதற்கு பொருத்தமானவர்கள் தொடர்பாக கலந்துரையாடி வருகின்றேன் - என்றார். (ப-110)

# காட்டிக் கொடுத்தவர்களுக்கு வாக்களிக்கப் போகிறோமா?

## கூட்டமைப்பின் அம்பாறை வேட்பாளர் கணேஷ் கேள்வி

அம்பாறை, ஜூலை 11

இறுதிப் போரைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கு வாக்களிக்கவேண்டுமா எனதமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அம்பாறையில் போட்டியிடும் வேட்பாளர் எஸ். கணேஷ் கேள்வியெழுப்பினார்.

எமது மண்ணை கள்ளனும் காவாலியும் குடிகாரனும் ஆளவேண்டிய சூழ்நிலை வந்தால் அதன் பழியை எமது சமுதாயம் ஏற்க வேண்டும். எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தளவில் உலகளாவிய ரீதியில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதில் சிலவற்றை ஏற்றுக்கொள்ளவும் நாங்கள் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

ஆனால் எமது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைப் பொறுத்தளவில் நாம் யாரையும் கொலை செய்யவில்லை, கப்பம் பெறவில்லை, களவு செய்யவும் இல்லை. இவ்வாறான காரியங்களில் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபடவில்லை. நாங்கள் அரசியலில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று பாதைகளைப் போட்டு மின் விளக்குகளைப் பொருத்தி எமது மக்களைத் திருப்திப்படுத்தவில்லை. எமது மண்ணைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது எமது இனத்தினுடைய வலியை நாம் அறிந்திருக்க வேண்டும். இதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. இவை அனைத்தையும் நாங்கள் தகர்த்தெறிந்து விட்டு மாற்று இனத்தவர்களோடு சேர்ந்து எமது மண்ணையும் மொழியையும்அழிக்கவிரும்பவில்லை.

எமது விடுதலைப் போராட்டத்தில் 49 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் இந்த மண்ணிலே புதையுண்டார்கள். ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரையும் காணாமலாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

கடந்த முறை பெற்ற வாக்குகளை விட நாங்கள் குறைவான வாக்குகளைப் பெற்றால் அதாவுல்லா சொன்னதைப் போன்று தமிழ் மக்கள் பைல்களைத் தூக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. இதை ஏற்படுத்தப் போகின்றவர் யார் என்று நீங்கள் அறிந்து பார்க்க வேண்டும். இறுதிப் போரில் என்ன நடந்தது என்றும் யார் காட்டிக் கொடுத்தார்கள் என்றும் உங்களுக்குத் தெரியும் - என்றார். (ப)

# பெரமுனவுக்கு பெரும்பான்மை கிடைத்தால் நசுக்கப்படுவோம்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 11

பொதுஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமாக இருந்தால் சிறுபான்மை சமூகத்தினுடைய விலாசத்தை இல்லாமல் செய்து விடுவார்கள் என்று அச்சப்படுகின்றோம் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் இந்த நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. இந்த நாட்டில் நடைபெற்ற தேர்தலில் கேட்கின்ற வேட்பாளர்களுக்குப் பயம், அச்சம் இருந்ததில்லை. ஆனால் இம்முறை நடைபெறுகின்ற தேர்தலில் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பயம், அச்சம் இருக்கின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமாக இருந்தால் சிறுபான்மை சமூகத்தினுடைய விலாசத்தை இல்லாமல் செய்து விடுவார்கள் என்று அச்சப்படுகின்றோம்.

இவர்களது நீண்டநாள் அபிலாசை. இந்த நாட்டிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தை அடக்கி, ஒடுக்கி விட வேண்டும், தமிழ் மக்களினுடைய, விடுதலைப் புலிகளுடைய போராட்டத்தை அடக்கி விட்டதாக ஓர் எதிர்பார்ப்பு அவர்களிடத்தில் இருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தையும், இந்த ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னால் அவர்களையும் ஒடுக்கி விட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். ஜனநாயக உரிமை என்பது உங்களது கருவையும் விட மேலானது என்பதை மறந்து விடாதீர்கள். கற்பை எவ்வளவு மதிக்கின்றீர்களோ உங்களது வாக்குரிமை அதைவிட உச்சமானது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள் - என்றார். (ப-150)

## நடைபெறவுள்ள தேர்தல்

# சிறுபான்மை இன மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கண்டி,ஜூலை 11

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலே சிறுபான்மை இன மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகிறது. எனவே அரசியல் இருப்பையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் தமிழ் மக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலை, வட்டகொடை பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலானது மிக முக்கியமானதாகும். நாட்டை ஆள்வதற்கு ஓர் ஆட்சிக் கட்டமைப்பு அவசியம். அதனை நாடாளுமன்றம் மூலமே ஏற்படுத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தலில் எழுச்சி பெறவேண்டும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் புதிய ஆட்சி 6 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. குறைந்த பட்சம் பொருள்களின் விலைகள்கூட குறைக்கப்படவில்லை. பல துன்பங்களை இந்த ஆட்சியின் கீழ் எதிர்கொள்ளவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அமைச்சரவையில் ஒரு முஸ்லிம் உறுப்பினர் கூட இல்லை. தமிழ் மக்கள் சார்பில் இருந்த ஆறுமுகன் தொண்டமானும் உயிரிழந்து விட்டார். எனவே சிறுபான்மையின பிரதிநிதிகள் இல்லாத அமைச்சரவையே இயங்குகின்றது. இந்நிலைமையை நீடிக்கவிடலாமா? நடைபெறவுள்ள தேர்தலானது சிறுபான்மையின மக்களின் தலைவிதியை தீர்மானிக்கப்போகின்ற தேர்தலாகும். எமது இருப்பை பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக்கொள்ளும் விதத்தில் வாக்களிக்கவேண்டும் - என்றார். (ஐ)

## பெண் அதிகாரம் இருப்பின் வேலைகள் சிறப்பாகும்

*மட்டு. வேட்பாளர் கூறுகின்றார்*

செங்கலடி, ஜூலை 11

அரசியல் அதிகாரம் பெண்களின் கைகளில் கிடைக்கும்போது பொதுநல வேலைத்திட்டங்களைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கர் தெரிவித்துள்ளார்.

அங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:




போர் காரணமாக மாவட்டத்தில் பெண் தலைமைதாங்கும் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உருவாக்கியுள்ளன. அவர்களை சமூக பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டிய கட்டாய தேவை எமக்கு உள்ளது.

ஊழல் அற்ற வெளிப்படையான அபிவிருத்தியுடன் கூடிய உரிமைசார் அரசியலை நடத்துவதற்கு இந்த கட்சியுடன் இணைந்துள்ளேன்-என்றார். (த)

# தேர்தலில் தமிழர் அரசுக்கு பாடம் புகட்டுவர்

*கூட்டமைப்பின் வேட்பாளர் உதயகுமார் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஜூலை 11

வடக்கு கிழக்கை ஆக்கிரமித்து தமிழ் மக்களை நசுக்க நினைக்கும் இந்தப் பேரினவாத அரசுக்கு தமிழ் மக்கள் நடைபெற இருக்கின்ற இந்தத் தேர்தலின் மூலமாகத் தகுந்த பாடத்தைப் புகட்டுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை அரசானது பெரும்பான்மை இன மக்களுக்கும் பௌத்த மதத்திற்கும் முன்னுரிமை அளித்து ஏனைய இன மக்களினதும் அவர்களின் மதங்களையும் அடக்கி ஒடுக்குவதற்கான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும் எதிர்ப்புக் காரணமாக தனது இத்திட்டங்களைப் பூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் உள்ளதனால் கூட்டமைப்பை எப்படியாவது பலவீனப்படுத்த வேண்டும் என பல சூழ்ச்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டாலும் அவை பலனளிக்கவில்லை என்றே கூறலாம். நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் கூட்டமைப்பின் ஆசனங்களைக் குறைக்க வேண்டும் என் கூட்டமைப்புக்கு எதிராக பல கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் இலங்கை அரசு களமிறக்கினாலும் அவையும் பயனளிக்கவில்லை. என்னதான் பிராயத்தனங்களைச் செய்தாலும் தமிழ் மக்களிடம் இருந்து கூட்டமைப்பை யாராலும் பிரிக்கவேமுடியாது. இதுதான்உண்மை. ஆகையால் நடைபெற இருக்கின்ற தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ் மக்கள் மேலும் பலப்படுத்துவார்கள் இதனூடாக வடக்கு கிழக்கை ஆக்கிரமித்து தமிழ் மக்களை நசுக்க நினைக்கும் இந்த பேரினவாத அரசுக்கு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலின் மூலமாக தகுந்த பாடத்தைப் புகட்டுவார்கள் - என்றார். (ப-150)

# 100 ஆசனங்களை ஐ.ம.ச. கைப்பற்றும்

*ரவூப் ஹக்கீம் நம்பிக்கை*

மட்டக்களப்பு, ஜூலை 11

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி நூறு ஆசனங்களாவது பெறக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக உள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

ஆளும் கட்சியில் இருந்து அதிக பெரும்பான்மையானோர் எங்களது கட்சியில் இணைந்துள்ளனர். எதிர்வரும் நாடாளுமன்றத்தில் பச்சை, மஞ்சள் நிறத்திலான ஐக்கிய மக்கள் சக்தி நூறு ஆசனங்களாவது பெறக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக உள்ளது என்பது எங்களுக்குப் பெரிய சந்தோசம். எமது கட்சி நாடு தழுவிய ரீதியில் பலமான இயக்கமாகும். நாங்கள் ஆளும் கட்சியிலோ, எதிர்க் கட்சியிலோ இருந்தாலும் முஸ்லிம்களை ஆளும் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிதான் என்பதை இந்தத் தேர்தல் உறுதி செய்யும். இப்போதுள்ள ஜனாதிபதி அதிகாரம் குறைந்த ஜனாதிபதி, நாடாளுமன்றம் இல்லாதமையால் தற்போது அதிகாரம் உள்ளது போன்று இருக்கின்றார். அடுத்த முறை அமையவுள்ள நாடாளுமன்றம் ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரங்கள் சமநிலையில் கொண்ட ஓர் நாடாளுமன்றம். இதற்கு முன்னர் இருந்த நாடாளுமன்றம் போன்று அல்ல. ஜனாதிபதிக்கு அமைச்சுப் பதவிகளை வைத்துக் கொள்ள முடியாது. திரைமறைவில் அமைச்சுப் பதவியை வைப்பதாகப் பார்வை கொடுத்தாலும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைக் கட்டுப்படுத்துகின்ற நிலைமைக்கு கொண்டு வரும். ஒரு வித்தியாசமான அரசியல் சூழலை நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் எதிர்பார்க்க முடியும். அண்ணன் தம்பிமார் கொஞ்சம் கஷ்டப்படுவார்கள். இவர்களுக்குள்ளும் பிரச்சினை வரலாம். நாங்கள் எல்லா இலக்கையும் அடையவில்லை என்றாலும் நாடாளுமன்ற அதிகாரங்களைக் கூட்டியுள்ளோம். அதிகாரங்கள் கூடிய ஒரு புதிய பாநாடாளுமன்றத்தில் இம்மண்ணில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியை அனுப்புங்கள் - என்றார். (ப-150)

## எமது புதிய பயணம் தமிழ் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும்

*ஈரோஸ் கூறுகிறது*

எமது ஈ.பி.டி.பியுடனான புதிய பயணம் மக்களுக்கு நன்மையைக் கொடுக்கின்ற பயணமாக இருக்கும் என ஈரோஸ் அமைப்பின் மன்னார் மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் ஆறுமுகநாதன் முரளி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஈரோஸ் அமைப்பு இம் முறை தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு நட்பு ரீதியான ஒத்துழைப்பைக் கொடுக்க முன்வந்துள்ளதுடன் அவர்களுடன் பேசவுள்ளோம்.

1976 இன் பிற்பகுதியாக இருக்கட்டும் 1980 ஆம் ஆண்டின் பிற்பகுதியாக இருக்கட்டும் ஈழப்புரட்சி அமைப்பான ஈரோஸின் கருத்துக்களை உள்வாங்கி ஈ எழுத்தைக்கொண்ட அனைவரும் ஓர் குடும்பமாக ஓர் கருத்தில் இயங்கியவர்கள். நாங்கள் கருத்து ரீதியாக ஒன்றுபட்டவர்கள். அந்தவகையில் காலங்கள் பல கடந்த பின்னர் கருத்து ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளோம். இந்த இணைப்புச் செயற்பாடு மக்களுக்கு நன்மையைக் கொடுக்கின்ற பயணமாக இருக்கும். இனிவரும் காலங்களில் ஈ குடும்பத்திற்குள் கோணல்மாணலான பேச்சுக்கு இடமிருக்காது - என்றார். (ப-110)

## மக்கள் சேவையே எனது இலக்கு

*அஷ்ரப் தாஹிர் தெரிவிப்பு*

அம்பாறை, ஜூலை 11

எவரையும் தோற்கடிக்கும் நோக்கத்துடன் நான் தேர்தலில் களமிறங்கவில்லை. மக்கள் சேவை ஒன்றையே நோக்காகக் கொண்டு தேர்தலில் களம் இறங்கியுள்ளேன்'

இவ்வாறு திகாமடுள்ள மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளராகப் பல வருடங்கள் இருந்து மக்கள் சேவையாற்றிவந்த நான் எனது சேவைகளைப் பரந்துபட மாவட்ட ரீதியாகமுன்னெடுக்கவேண்டும்என்ற அவாவிலும், மக்களது கோரிக்கையின் பேரிலும் பொதுத்தேர்தலில் களமிறங்கியுள்ளேன். ஒரு சிலர் முன்னெடுக்கும், நீலிக் கண்ணீர்ப் பிரசாரங்களின்படி ஊருக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதோ, அல்லது வெறும் பொம்மையாக அப்பதவியிலிருந்தோரைத் தோற்கடிப்பதோ எனது நோக்கமோ, இலக்கோ அல்ல.

அவ்வாறு எனக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் பொய்களும் கட்டுக்கதைகளும்உள்ளத்தைக்கொதிக்க வைத்தாலும், உண்மையின் பக்கம் மக்கள் திரள்வது கண்டு ஆறுதல் பெறுகின்றேன். சமூகத்திற்காக, என்றும் துணிச்சலுடன் குரல் கொடுத்தும், தன்னை அர்ப்பணித்தும், பல்வேறு அபிவிருத்திப்பணிகளை எம்மக்களுக்காக முன்னெடுத்துவரும் சிறந்த தலைமைத்துவமான ரிஷாத் பதியுதீனின் வழிகாட்டலில் எனது சேவைகளைத் தொடர்வேன். சமூகத்தின் குரலாகத்திகழாது தலையாட்டிப் பொம்மையாகத் திகழ்ந்த சுயநல அரசியல் நோக்கு கொண்ட முஸ்லிம் காங்கிரஸினரையும், அதன் தலைமையையும் முஸ்லிம் மக்கள் இன்று நன்கு புரிந்து வைத்துள்ளனர். சமூகம் சார்ந்த, முஸ்லிம்களுக்கெதி[illegible] அநீதிகளுக்கு எதிராக இவர்க[illegible]ரல் கொடுக்க முடியாது - என்[illegible] (ப-30)

# முஸ்லிம் அமைச்சர்கள் காணிகளைப் பறித்தனர்

*முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு, ஜூலை 11

கருணா அமைச்சராக இருந்த காலத்திலேயே மட்டக்களப்பில் முஸ்லிம் அமைச்சர்கள் சட்டவிரோதமாகக் காணிகளை அபகரித்தனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் குற்றஞ்சட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை புணானை வீதியை அண்டிய பகுதியில் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்படுகின்றன. வாகரைப்பகுதியில் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகள் முஸ்லிம் அரசியல்வாதிகளினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவை அனைத்தும் தமிழர்களின் பூர்வீகக்காணிகள். காயங்கேணி வாழைச்சேனையில் ஒரு பகுதி போய்விட்டது. புலி பாய்ந்தகல், செங்கலடி, ஆரையம்பதிப் பகுதிகளிலும் இவ்வாறு காணிகள் பறிபோய்விட்டன. இதற்கெல்லாம் காரணம் கருணா ஆட்சியில் இருந்தமைதான். மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரின் சொந்த இடமான கிரான் பிரதேச சந்திவெளி பிரதேசத்தில் உள்ள வீதிகளின் நிலைமைகளைச் சென்று பாருங்கள். குட்டிச் சிங்கப்பூர் போன்ற நகரங்களில் மாபெரும் அபிவிருத்தி அடைந்த ஒரு பிரதேசமாக அது காணப்படுகின்றது.

முஸ்லிம்களின் அரசியல் வாதிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறும் இவர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியாத ஒரு கையாலாகாதவர். அவர் அமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினராக வந்தபோதுதான் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவான முஸ்லிம் அரசியல்வாதிகளின் அட்ட காசங்கள் அதிகரித்தன - என்றார். (ப)



விடுதலைப்போரின் போராட்டப் பாதை களில் தடைநீக்கிகளாகக் காணப்படும் கரும்புலி களின் நினைவு நாள் கடந்த ஜூலை 5 ஆம் திகதி டென்மார்க்கில் உணர்வுபூர்வ மாக நடை பெற்றது. பொதுச்சுடர் ஏற்றி ஆரம்பிக் கப்பட்ட இந் நிகழ்வில் தொடர்ந்து ஈகைச் சுடர், மலர் வணக்கம், அகவணக்கம் மற்றும், கவிதை, பேச்சுகள் போன்ற கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# கொரோனா வைரஸ் சமூகத்தில் பரவாமல் தடுப்பதற்கு நடவடிக்கை

பொலநறுவை,ஜூலை 11

**கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் பரவல் சமூகத்தின் மத்தியில் பரவாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்று தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் வைத்திய நிபுணர் தீபா கமகே தெரிவித்தார்.**

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலை யத்தில் பரவிவரும் கொரோனா தொற்று தொடர்பாக கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலை யத்தில் கொரோனா வைரஸ் பரவுவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி வருகின்றோம். மத்திய நிலையத் துக்கு சேவைகளை மேற்கொண்டுவ ரும் சிலர் வெளிப்பிரதேசங்களுக்குச் சென்றிருக்கின்றனர். அவர்களை இனம் கண்டு வேறுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

இவ்வாறு கந்தக்காடு முகாமில் சேவை விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர்களை வேறுபடுத்தும் நடவடிக்கை கடந்த 8ஆம் திகதி ஆரம் பிக்கப்பட்டது. சந்தேகநபர்களை கண் டுபிடிக்கும் நடவடிக்கைகளை சுகா தார மற்றும் புலனாய்வுப்பிரிவு அதி காரிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதன் பிரகாரமே புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இருந்த அதிகாரி ஒரு வர், மாரவில பிரதேசத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருந்தார்.

மேலும் கந்தக்காடு முகாமில் இருந்து வெளிப்பிரதேசங்களுக்கு சென்றிருப் பவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வரு கின்றனர் - என் றார். (க)

## சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 11

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவ கச்சேரி பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ரி3-159)

## பணிஸ்க்குள் வண்டு

சாவகச்சேரி ஜூலை 11

கிறீம் பணிஸ் ஒன்றினுள் சர்க்கரைப் பாண்டி வண்டு இருந்தமையைத் தொடர்ந்து அதனைப் பறிமுதல்செய்த பொதுச் சுகாதார பரிசோதகர் பணிஸ் உற்பத்தியாளருக்கு எதிராக சாவகச் சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அண்மையில் நடை பெற்ற வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவில் திருவிழாவின் போது, அங்கிருந்த வர்த்தக நிலையங் களில் காணப்பட்ட பொதி செய்யப்பட்ட கிறீம் பணிஸ்களைச் சோதனையிட்ட போதே பணிஸ் ஒன்றினுள் இறந்த நிலையில் வண்டொன்று காணப்பட் டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனை யடுத்து விற்பனைக்கு வைக்கப்பட்டி ருந்த பணிஸ்களைக் கைப்பற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அவற்றை குறித்த வர்த்தக நிலையத் திற்கு வழங்கிய வெதுப்பக உரிமையா ளருக்கு எதிராக நீதிமன்றில். வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (ரி3-9)

கொடிகாமம் மந்துவிலில்

## சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை

கொடிகாமம், ஜூலை 11

மந்துவில் பொதுச் சுகாதாரப் பிரிவில் உணவகங்கள், வெதுப்பகங்கள், திருமண மண்டபம் ஆகியன சாவகச் சேரி சுகாதார வைத்திய அதி காரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர் களால் நேற்றுமுன்தினம் வியாழக்கி ழமை திடீர் பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது தனிநபர் சுகாதா ரத்தை உயர்ந்த மட்டத்தில் பேணாது உணவு கையாளும் நிலையில் பணியாற்றிய ஊழியர்கள், ஏப்ரன் (மேலங்கி) மற்றும் தொப்பி அறிந்திருக் காத ஊழியர்கள், காட்போட் பெட்டிகளில் களஞ்சியப்படுத் தப்பட்ட சிற்றுண்டிகள், குளிர் சாதனப் பெட்டியில் சமைத்த மற்றும் சமைக்காத உணவு களை களஞ்சியப்படுத்தி வைத் திருந்தமை, குளிர்சாதன பெட்டியில் மாமிச உணவு களை நீண்டகாலமாக பதனி ழுந்த நிலையில் களஞ்சியப் படுத்தி வைத்திருந்தமை ஆகி யன கண்டுபிடிக்கப்பட்டு சம் பந்தப்பட்ட நிலைய உரிமை யாளர்களுக்கு சட்ட நடவடிக் கைக்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அத்துடன், உடனடியாக குறை பாடுக ளைச் சரி செய்யுமாறு எச்சரிக்கை செய்யப்பட்டது டன் கைப்பற்றப்பட்ட உணவு கள் உரிமையாளர்களின் சம்மதத்துடன் அழிக்கப்பட் டன. (ரி3-159)



## கிளி.இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 11

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களின் பெற்றோருடனான கற்றல் வலுவூட் டல் செயற்றிட்ட கலந்துரையாடல் நடைபெற் றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல், கடந்த புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை அதிபர் கி.விக்கினராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பரீட் சைக்குத் தோற்றும் உயர்தர மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி3-159).

## நாடு திரும்பிய 283 இலங்கையர்கள்

கொழும்பு, ஜூலை 11

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 278 இலங் கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர். இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் 226 என்ற சிறப்பு விமா னத்தின் மூலமாகவே அவர்கள் நேற்று அதி காலை 4.50 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதேவேளை, ஜப்பானின் நரிட்டோவிலிருந்தும் நேற்று அதிகாலை 4.10 மணிக்கு மேலும் ஐந்து இலங்கையர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும், கட்டாரின் தோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமானத்தின் மூலமாக 24 வெளி நாட்டு மாலுமிகளும் அதிகாலை 1.15 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரை யும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விமான நிலைய ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி2)





நாவற்குழி சித்திர வேலாயுதர்பெருமானின் ஆதிசிவனுக்கு அபிஷேகம் இடம் பெற்று, 108 சங்காபிஷேகம் நேற்றுமுன்தினம் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. அத்துடன் மாலை 6.00 மனை ... ளகோலவிழா இடம்பெற்று முருகன் வள்ளி - தெய்வானை சமேதரராய் உள் வீதி ெ... ந்தார். (ரி3-159)

# முன்னணி நிறுவன நிர்வாகிகளாக 58 இந்தியர்கள்



நியூயோர்க், ஜூலை 11

இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்களில் 58 பேர் அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர் உள்ளிட்ட 11 நாடுகளில் பல முன்னணி நிறுவனங்களில் முதன்மை நிர்வாகப் பொறுப்புகளில் உள்ளனர். இந்நிறுவனங்களின் சந்தை மதிப்பு 4 லட்சம் கோடி டொலர் அளவில் உள்ளது. இந்நிறுவனங்களின் வருவாய் ஒரு லட்சம் கோடி டொலர். இவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை 36 லட்சம் ஆகும்.

அமெரிக்காவில் செயற்படும் இந்தியப் புலம்பெயர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கூகுள் சுந்தர் பிச்சை, பெப்சி இந்திரா நூயி, ஹர்மான் தினேஷ் பாலிவால், மாஸ்டர் கார்ட் அஜய் பங்கா, வெர்டெக்ஸ் பார்மா ரேஷ்மா கெவால் ரமணி என்போர் இவர்களில் உள்ளடங்குகின்றனர். 58 இந்திய நிர்வாகிகளில் 5 பேர் மட்டுமே பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1)



உய்குர் முஸ்லிம் விவகாரம்:

# சீன அதிகாரிகள் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை

**வொஷிங்டன், ஜூலை 11**

**சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் உள்ள சிறுபான்மையினரான உய்குர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ஆளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த அதிகாரிகள் மூவருக்கு அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

இந்த அதிகாரிகள் மட்டுமல்லாது அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கும் அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதிக்கப்படுவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ அறிவித்துள்ளார்.

இதன்படி ஜின்ஜியாங் மாகாணத்தின் உய்குர் சுயாட்சிப் பகுதியில் உள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சென் குவாங்குவோ, ஜின்ஜியாங் மாகாணத்தில் அரசியல் மற்றும் சட்டக் குழுவின் செயலாளர் ஹு ஹெய்லன், ஜின்ஜியாங் பொது பாதுகாப்புக் குழுவின் செயலாளர் வாங் மிங்ஷான் ஆகியோருக்கே குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

# முகக்கவசம் அணியாதோருக்கு அரச சேவைகள் மறுப்பு

ஈரான் ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு

தெஹ்ரான், ஜூலை 11

முகக்கவசம் அணியாத ஈரானியர்களுக்கு அரசின் சேவைகள் மறுக்கப்படும் என்று ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி அறிவித்துள்ளார்.

பொருளாதாரத் தேவைகளுக்காக சமீபத்தில் ஈரான் ஊரடங்கைத் தளர்த்தியது. இந் நிலையில் கொரோனா தொற்று தற்போது ஈரானில் தீவிரமடைந்துள்ளது.

முகக்கவசம் அணியாத ஈரானியர்களுக்கு அரசின் சேவைகள் மறுக்கப்படும் என்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றாத நிறுவனங்கள் ஒருவாரம் மூடப்படும் என்றும் அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார். (ரி1)




# பொலிவியா ஜனாதிபதிக்கு கொரோனா!

லாபஸ், ஜூலை 11

தென் அமெரிக்க நாடான பொலிவியா நாட்டின் இடைக்கால ஜனாதிபதியான ஜீனைன் ஏயெஸிற்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனை ஜீனைன் ஏயெஸ் அவரது டுவிட்டர் பக்கத்தில் காணொலி வாயிலாக உறுதிப்படுத்தியுள்ளார். தனக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும், வைத்தியர்களின் அறிவுரைப்படி வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளேன் என்றும் அவர் காணொலியில் தெரிவித்துள்ளார். பொலிவியா நாட்டில் இதுவரை 42 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் 1500 இற்கும் மேற்பட்டோர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி1)

# இந்திய அலைவரிசைகளுக்கு நேபாளத்தில் தடை !



காத்மாண்டு, ஜூலை 11

இந்தியாவில் உள்ள தனியார் செய்தி அலைவரிசைகளை நேபாளத்தில் ஒளிபரப்ப அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது. இந்திய அரச ஊடகமான தூர்தர்ஷன் மட்டும் ஒளிபரப்பு செய்ய அனுமதி வழங்கியுள்ளது. நேபாள நாட்டின் உணர்வுகளைப் புண்படுத் தும் வகையில் தனியார் செய்தி அலைவரிசைகள் செய்தி வெளியிடுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் நேபாள அரசு சார்பில் எந்தவிதமான அதிகாரபூர்வமான உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

லிபுலேக், காலாபானி உள்ளிட்ட இந்தியப் பகுதிகளைத் தங்கள் எல்லைகளாக மாற்றி தன்னிச்சையான வரைபடத்தை நேபாள அரசு வெளியிட்டது. இந்த விவகாரத்தில் நேபாள பிரதமர் சர்மா ஒலியையும், அவரின் அரசையும் இந்திய செய்தி அலைவரிசைகள் கடுமையாக விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளான சியோல் மேயர் சடலமாக மீட்பு

சியோல், ஜூலை 11

தென்கொரிய தலைநகர் சியோல் நகரின் மேயர் பார்க் ஒன் சூன் காணாமற்போன நிலையில், சுமார் 7 மணி நேரத்தின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் சியோல் மேயர் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்ணொருவர் மேயர் பார்க் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தியிருந்த நிலையில் அவர் காணாமல் போயுள்ளார் என அவரது மகள் பொலிஸாருக்கு தெரிவித்தார். இதையடுத்து சுமார் 7 மணிநேர தேடுதலுக்கு பின்னர் அவரை சியோலின் சங்பக் மலைப்பகுதியில் இருந்து சடலமாக மீட்டனர். அவர் எவ்வாறு இறந்தார் என்பது குறித்து தென்கொரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 64 வயதுடைய பார்க் ஒன் சூன் வயது தென்கொரிய தலைநகரான சியோல் நகரின் மேயராகவும் தென்கொரியாவின் இரண்டாவது சக்தி வாய்ந்த தலைவராக இருந்து வந்துள்ளார். (ரி1)





# பிரேசிலில் தொடர்ந்தும் கொரோனா தாண்டவம்!

பிரேசிலியா, ஜூலை 11

கொரோனாத் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் உலகளவில் அமெரிக்காவைத் தொடர்ந்து பிரேசில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

பிரேசில் நாட்டில் கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை நேற்றைய நிலைவரப்படி 1,759,103 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று முன்தினம் 1199 பேர் கொரோனாவுக்கு பலியானமையைத் தொடர்ந்து பலியாகியோர் மொத்த எண்ணிக்கை நேற்றைய நிலைவரப்படி 69 ஆயிரத்து 254 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 11.5 லட்சத்தைக் கடந்துள்ளது. (ரி1)



# உசைன் மகளுக்கு ஒலிம்பியா

புதுடெல்லி, ஜூலை 11

மின்னல் வேக மனிதர் என்று புகழப்படும் உசைன் போல்ட், தனது பெண் குழந்தைக்கு வித்தியாசமான முறையில் பெயரிட்டுள்ளார்.

ஜமைக்காவைச் சேர்ந்த பிரபல ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட், 100 மீ. ஓட்டத்தை 9.58 விநாடிகளில் ஓடி உலக சாதனை செய்தவர்.

100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம், 4x100 தொடர் ஓட்டம் ஆகியவற்றில் உலக சாதனை படைத்து தன்னிகரற்ற தடகள வீரராக உள்ளார். ஒலிம்பிக் போட்டிகளில் 8 முறை தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். 2008, 2012, 2016 என மூன்று ஒலிம்பிக் போட்டிகளிலும் 100 மீ. ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் ஆகிய இரண்டிலும் தங்கப் பதக்கங்களை வென்று அரிய சாதனையையும் படைத்தவர்.

2017 உலகசாம்பியன்ஷிப்போட்டிக்குப்பிறகு ஓய்வு அறிவிப்பை வெளியிட்டார். உசைன் போல்ட்டின் காதலி காசி பென்னட்டுக்குக் கடந்த மே 17 அன்று பெண் குழந்தை பிறந்தது. உசைன் போல்ட் தந்தையானது குறித்த தகவலை ஜமைக்கா பிரதமர் ஆண்ட்ரூ ஹோல்னஸ், தனது டுவிட்டர் வழியாகத் தெரிவித்தார்.

உசைன்போல்ட் காசி பென்னட் ஆகிய இருவரும் 2014 முதல் காதலித்து வருகிறார்கள். இந் நிலையில் தனது குழந்தைக்கு ஒலிம்பியா லைட்னிங் போல்ட் என்று பெயர் சூட்டியுள்ளார் போல்ட். குழந்தையின் புகைப்படத்தையும் சமூகவலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் உசைன் போல்ட்டின் ரசிகர்கள், இதுவே இந்த ஆண்டின் மிகச் சிறந்த பெயர் என கொண்டாடி வருகின்றனர். (ரி2)

# ஐ.பி.எல்லை நடத்துவதில் பி.சி.சி.ஐ. முனைப்பு

புதுடெல்லி, ஜூலை 11



கொவிட் 19 தொற்று நோயின் காரணமாக கடந்த மார்ச் மாதம் ஆரம்பமாகவிருந்த ஐ.பி.எல். போட்டிகள் காலவரையின்றி இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் இந்தியன் பிரீமியர் லீக்கை நடத்துவதற்கு பி.சி.சி.ஐ. என அழைக்கப்படும் இந்திய கிரிக்கெட் நிறுவனம் ஆர்வமாகவுள்ளதாக அதன் தலைவரும் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவருமான சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

எனினும் அதன் ஆரம்பத் திகதி தொடர்பில் இறுதி முடிவொன்று எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இவ்வாறாக சவுரவ் கங்குலி மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியாவில் ஐ.பி.எல்.போட்டிகள் நடத்தப்படுகின்றமையைஉறுதிசெய்வது பி.சி.சி.ஐ.யின் முன்னுரிமை. உலகம் முழுவதும் ஒரு பயங்கரமான கட்டமாக இருந்த நிலையில் கிரிக்கெட் இயல்புநிலைக்குத்திரும்புவது முக்கியம். எவ்வாறாயினும், ஐ.பி.எல். குறித்த எந்தவொரு முடிவையும் சர்வதேச இந்திய நிறுவனம், இந்த ஆண்டின் பிற்பகுதியில் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாக திட்டமிடப்பட்டுள்ள இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்துக்கு பிறகு எடுக்க வேண்டும் - என்றார். (ரி2)

# புதிய பயிற்சியாளராக சொமித்த டி அல்விஸ்

கொழும்பு, ஜூலை 11

இலங்கை வலைப்பந்தாட்டத் தேசிய அணியின் புதிய பயிற்சியாளராக சொமித்த டி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை வலைப்பந்தாட்டச் சட்டத்துக்கு அமைய அவர் எதிர்வரும் ஒரு வருடத்திற்கு தேசிய வலைப்பந்தாட்ட அணியின் பயிற்சியாளராகச் செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலைப்பந்தாட்ட அணியின் பிரதான பயிற்சியாளராகக் கடமையாற்றிய திலகா ஜினதாசதனது பதவியை அண்மையில் இராஜினாமாச் செய்தார். இதனையடுத்து புதிய பயிற்சியாளரை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதன்படி. குறித்த பதவிக்கு கொழும்பைச் சேர்ந்த சொமித்தா டி அல்விஸ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனோன்மணி சின்னத்தம்பி மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த கணேஷ் தனுசன் ஆகிய மூவரும் விண்ணப்பித்திருந்தனர்.

சி.ரத்னமுதலி தலைமையில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் லால் ஏக்கநாயக்க, யசா ராமசந்த்ர, யஸ்மின் தர்மரத்ன மற்றும் ஒலீவியா கமகே உள்ளிட்டோர் உறுப்பினர்களாக கலந்துகொண்டனர்.

இதன்படி, இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக சொமித்த டி அல்விஸ் தெரிவு செய்யப்பட்டமையுடன், ஏனைய 2 பேரும் மாவட்ட ரீதியாக பயிற்சியாளராக நியமிக்கப்படுவார்கள் என இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது. (ரி2)



# வடமராட்சி கால் பந்தாட்டச்சங்கம் பரு. மருத்துவமனைக்கு நிதி உதவி

கரணவாய், ஜூலை 11

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் துரித அபிவிருத்தித் திட்டத்திற்கு, வடமராட்சி கால்ப் பந்தாட்டச்சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் தலா 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு முடிவு செய்துள்ளன.

வடமராட்சி கால் பந்தாட்டச்சங்கத்தின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான அ.வசந்தன் பா.முகுந்தன் சி.வசந்தகுமார் மற்றும் கழகங்களின் தலைவர் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் நிறைவேற்றுக்குழுத் தலைவர் ரி. வரதராசன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இலங்கை கால்ப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தலைவரிடம் ஒப்படைத்தல்,1000 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை ஹற்றன் நஷனல் வங்கியில் வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல், இரண்டு வருடாந்த பொதுக் கூட்டத்தை விரைவில் நடத்த ஒழுங்குகளை மேற்கொள்ளுதல், 27ஆம் திகதி விசேட பொதுக் கூட்டத்தில் படிவங்களை வழங்குதல், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை துரித அபிவிருத்தி திட்டத்திற்கு கழகங்களின் உதவியோடு ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்குதல், ஒவ்வொரு கழகமும் 5000 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத நிதியினை 13 ஆம் திகதிக்கு முன்னர் கடிதத்துடன் தலைவரிடம் வழங்குதல் வேண்டும்-என்கிறது. (ரி-2108)



# நடால் விளையாடுவது சந்தேகம்

மாட்ரிட், ஜூலை 11

கொரோனா பீதி காரணமாக தள்ளி வைக்கப்பட்டுள்ள யுஎஸ் ஓப்பின் ரென்னிஸ் போட்டியில் நடப்பு சாம்பியனான ரபேல் நடால் பங்கேற்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் விம்பிள்டன் இரத்து செய்யப்பட்டது. மற்றைய போட்டிகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் பல்வேறு சர்வதேச போட்டிகளும் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. அப்படி மே மாதத்தில் நடைபெற வேண்டிய யுஎஸ் ஓப்பின் ரென்னிஸ் போட்டி ஆகஸ்ட் மாதம், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவை சேர்ந்த வீரர், வீராங்கனைகள் தவிர வேறு யாரும் யுஎஸ் ஓப்பினில் பங்கேற்பதை உறுதி செய்யவில்லை. உலகின் முதல் நிலை வீரரும், கொரோனாவில் இருந்து மீண்டவருமான நோவக் ஜோகோவிச்சும் (செர்பியா) யுஎஸ் ஓப்பினில் பங்கேற்பது குறித்து இன்னும் முடிவெடுக்க வில்லை என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், யுஎஸ் ஓப்பின் நடப்பு சாம்பியனான ஸ்பெயின் வீரர் நடால் பங்கேற்பாரா? என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது. அவர் இதுவரை யுஎஸ் ஓப்பினில் பங்கேற்பது குறித்து எந்த உறுதிமொழியையும் அளிக்கவில்லை. அதே நேரத்தில் ஸ்பெயினில் நடைபெறவுள்ள மாட்ரிட் ஓப்பின் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதை அவர் உறுதி செய்துள்ளார். அந்தப் போட்டி செப்.14ஆம் திகதி தொடங்குகிறது. யுஎஸ் ஓபன் ஓகஸ்ட் 31 முதல் செப்.13 வரை நடைபெறுகிறது. யுஎஸ் ஓப்பின் முடிந்த மறுநாளே மாட்ரிட் போட்டியில் நடால் பங்கேற்கும் வாய்ப்பு குறைவு. (ரி2)

## 15 மாவட்டங்களுக்குசிவப்பு அறிவித்தல்

இலங்கையின் 15 மாவட்டங்களுக்கு கடுமையான இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னல் தாக்கம் குறித்து சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.
கிழக்கு, வடமத்திய, மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் 15 மாவட்டங்களான அனுராதபுரம், திருகோணமலை, பொலநறுவை, மட்டக்களப்பு, மாத்தளை, கண்டி, கேகாலை, நுவரெலியா, பதுளை, அம்பாறை, மொனராகலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் 75 மில்லிமீற்றர் வரையிலான மழை பெய்யக் கூடும் எனவும் இடி மின்னல் தாக்கங்களில் இருந்து பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் வானிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ரி)

## சுகாதார நடைமுறை பற்றிய வர்த்தமானியை வெளியிடுக

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11
தேர்தல் பரப்புரைக் காலப்பகுதியில் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார ஆலோசனைகள் தொடர்பான வழிகாட்டல்களை வர்த்தமானிப்படுத்தும் பொறுப்பு அரசுக்கே இருக்கின்றது. அவற்றை வர்த்தமானி படுத்துவதில் தடைகள் இல்லையெனில் அதனை விரைவாக மேற்கொள்ளவேண்டும்.
இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாச்சி வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
நாட்டில் இன்னும் கொரோனா அச்சுறுத்தல் உள்ளது. தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது பின்பற்றவேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. என்றாலும் அந்த வழிகாட்டல்கள் வர்த்தமானி படுத்தப்படாமல் இருப்பதால் இதனை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது.
சுகாதார வழிகாட்டல்களை வர்த்தமானிப்படுத்தும் பொறுப்பு அரசுக்கே இருக்கின்றது. சுகாதார வழிகாட்டல்கள் வர்த்தமானி படுத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மக்கள் பிரதிநிதிகளாக வருவதற்கு எதிர்பார்த்திருக்கும் வேட்பாளர்கள் யாருடைய உயிருக்கும் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் செயற்படாமல், சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி நடக்கவேண்டும்.
தேசிய தலைமைத்துவம் ஒன்றுக்கு எதிர்பார்க்கும் வேட்பாளர்கள் சமூகத்துக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும். கொரானா வைரஸ் தொற்று பரவாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்கொள்ளவேண்டும். அதனால் மக்கள் சார் தலைவராக எதிர்பார்ப்பு இருப்பவர்கள் எப்போதும் சமூகத்துக்கு முன்மாதிரியாகவே செயற்படவேண்டும். தற்போது கொரானோ தொற்று மீண்டும் பரவும் ஆபத்து இருந்துவருவதால் தேர்தல் பிரசாரங்களின்போது வேட்பாளர்கள் பாதுகாப்பாகவும் பொறுப்புடனும் தங்கள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்- என்றார். (எ)

PAFFREL


## நன்றி நவில்கின்றோம்

**நவரத்தினம் செல்வநாயகம் ஹண்ட் (Retired Health Superintendent, Colombo Municipality Council)** அவர்களின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், மின்னஞ்சல் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஞானதேவி செல்வநாயகம் (Girty) (மனைவி)**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
18 . 07 . 1933

இறப்பு
22 . 06 . 2019

## சண்முகம் மகாலட்சுமி

ஆண்டு ஒன்று கடந்து போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
உன் அறிவுரை தந்த ஆளுமையின் வழி தொடர்கின்றோம்
விழி நனைந்த விடியல்கள் மனதோரம்
தூங்காத உன் நினைவுகள்
வைராக்கியம் உன் மனம் அதில்
வஞ்சகத்துக்கு பெரும் பஞ்சம்
அள்ளி வழங்குவதில் வள்ளல்
இன்றும் வாயார வாழ்த்திச் செல்கின்றனர்
உன் பாதச் சுவடுகள் எங்கள் பாதையாகின்றது தாயே...

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சிவநேசன் (நேசன்)



வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியை பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவநேசன் (நேசன்) நேற்று (10.07.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தியாகராஜாவின் பெறாமகனும், நிர்மலாவின் அன்புக் கணவரும், சுகன்யா, அனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஷ், சுகிதா ஆகியோரின் மாமனாரும், கமலாதேவி (வட்டக்கச்சி) காலஞ்சென்றவர்களான பத்மாதேவி, சிவமூர்த்தி மற்றும் சிவகுமார், சிவராஜன் கௌரி மனோகரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெதர்லாந்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :- சகோதரர்கள்.

## பெண் உதவியாளர் தேவை

உடல் நலம் குன்றிய (74) எழுபத்து நான்கு வயதுடைய முதிய பெண் ஒருவரின் உடல் சம்பந்தமான - உணவு சம்பந்தமான பராமரிப்புக்கு மட்டும் பெண் உதவியாளர் ஒருவர் எம்முடன் தங்கியிருந்து பராமரிப்பதற்குத் தேவைப்படுகின்றார். ஊதியம் நேரில் பேசித்தீர்க்கலாம்.

தொடர்பு: கந்தசாமி விஜயகுமார் (குட்டித்தம்பி)
அம்பாள் ஸ்ரோர்ஸ்,
ஆலடி, அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
077 923 8976

## மரண அறிவித்தல்



### சபாரத்தினம் சுந்தரலிங்கம்

(Retired MLT ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட பரிசோதகர்)

செட்டியகுறிச்சி. பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் கற்குழி வீதி. அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சுந்தரலிங்கம் நேற்று (10.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் சின்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ் வரியின் கணவரும் கௌரி (கொழும்பு). சங்கர் (அமெரிக்கா). சுதர்சன் (கதிரியக்கவியலாளர். யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும். அருள்நேசன் (கொழும்பு). ஸ்ரீவித்யா (அமெரிக்கா). சாருமதி (ஆசிரியை. யா/வீரசிங்கம் மத்திய கல்லூரி. மீசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அரிஹரன். அஸ்விகா. அபிநிதி. சேயவன். ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கௌரி இல்லம்
கற்குழி வீதி,
அராலி தெற்கு
அராலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 309 5984


## மயங்கி விழுந்து மூதாட்டி இறப்பு!

சாவகச்சேரி, ஜூலை 11
மீசாலை, அல்லாரை தெற்கில் 80 வயது மூதாட்டி ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச் நேற்று நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மங்கையர்கரசி என்ற மூதாட்டியே உயிரழந்துள்ளார்.
திடீரென மயங்கி விழுந்த அவரை உறவினர்கள் சாவகச்சேரி மருத்துவமனைக்கு சென்றுள்ளனர். எனினும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முன்னரே மூதாட்டி உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.
மூதாட்டியின் உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளின் பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# NOTICE OF REVOCATION OF POWER OF ATTORNEY

We, **IYATHURAI JEYARASA** and **RATHIKA JEYARASA** of Kanukkerni East, Mulliyavalai, Mullaitivu Sri Lanka do hereby inform the Government of the Democratic Socialist Repu blic of Sri Lanka that we have with effect from the date of this Notice revoked and cancelled the Special Power of Attorney **No.9963** attested by **T.Paramsothy** Notary Public on 28.04.2019 granted **Balachanthiran Selvarani** (Holder of National Identity Card No.196880903848) of ward No.03, Mulliyavalai, Mullaitivu, Sri Lanka and that the said Grantee shall cease to have any authority whatsoever to act for us or on our behalf in any manner in relation to the property described in the schedule to the said special power of Attorney namely **"Aladiyil Thundum Navala diyilkadum"** situated at **Mulliyawalai, Mullaitivu, Sri Lanka** of which We are the lawful owners in terms of **Deed of Transfer No. 6262** dated **02.09.2011** attested by the **T.Paramsothy** Notary Public of **Mullaitivu**.

And that we shall not hold our self responsible for any act deed or transaction done or entered into by the said **Balachanthiran Selvarani** purpo rtedly on the said special power of Attorney which stands revoked and cancelled inoperative and ineffective as from the date of this Notice.

The said **Balachanthiran Selvarani** had been previously informed by letter dated 17.02.2020 sent by our lawyer **Yalini Gowthaman** on our instructions of the revocation and cancellation of the said special power of Attorney.

IYATHURAI JEYARASA
RATHIKA JEYARASA

(cs.32923)(13.17)

## அற்றோணித்தத்துவம் இல்லாதொழிக்கப்பட்டது தொடர்பான அறிவித்தல்

இலங்கை, முல்லைத்தீவு, முள்ளியவளை, கணுக்கேணி கிழக்கு எனும் விலாசத்தை சேர்ந்த **ஐயாத்துரை ஜெயராசா வும் மற்றும் ஜெயராசா ராதிகாவும் 28.04.2019** ஆம் திகதி யன்று முல்லைத்தீவு பிரசித்த நொத்தாரிசு தங்கராசா பரஞ்சோதி என்பவரால்அ த்தாட்சிப்படுத்தப்பட்டதும் இல.9963 என்ற இலக்கத்தையுடையதும் இலங்கை, முல்லைத்தீவு, முள்ளிய வளை, 3ம் வட்டாரம் என்ற இலக்கத்தைச் சேர்ந்த **பாலச்சந் சந்திரன் செல்வராணி** (இல.196880903848) என்ற தேசிய அடையாள அட்டை இன் உரிமையாளர்) என்பவருக்கு வழங் கப்பட்டதுமான விசேட அற்றோணித்தத்துவத்தை இவ்வறி வித்தல் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளோம் என இலங்கை சோசலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் நாங்கள் அறிவிப் பதுடன் இலங்கை, முல்லைத்தீவு, முள்ளியவளை என்ற முகவரியில் அமைந்துள்ள **"ஆலடியில் துண்டும் நாவலடியில் காடும்"** என்று அழைக்கப்படுவது மேற்கூறப்பட்டுள்ள விசேட அற்றோணித்தத்துவத்தில் விபரிக்கப்படுள்ள ஆதனம் தொடர் பாக எமது சார்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் அல்லது எவ் விதத்திலும் எமது சார்பாக செயற்படும் அதிகாரத்தை பெறுநர் இழந்து துவிடுவார் எனவும் முல்லைத்தீவு பிரசித்த நொத் தாரிசு **தங்கராசா பரஞ்சோதி** என்பவரால் அத்தாட்சிப் படுத்தப் பட்டதும் 02.09.2011 ஆம் திகதியன்று இல.6262 என்ற இலக்கமுடைய **அறுதியுறுதி** ஆதனத்தின் சட்டரீதியிலான உரிமையாளர்கள் நாங்கள் தான் எனவும் அறிவிக் கின்றோம்.

இந்த அறிவித்தலின் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு மற்றும் இரத்துச் செய்யப்பட்டு இயங்காமல் இருப்பதும் செயல் வலுப் பெறாமலிருப்பதும் மேற்கூறப்பட்ட **பாலச்சந்திரன் செல்வராணி** மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் செயற் பாடு அல்லது எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம்.

மேற்கூறப்பட்டுள்ள விசேட அற்றோணித்தத்துவத்தின் இல்லா தொழிப்பது மற்றும் இரத்துச் செய்தல் தொடர்பாக எங்களால் அறிவிக் கப்பட்ட பணிப்புரைகள் எமது சட்டத்தரணியாகிய யாழினி கௌதமன் என்பவரால் பாலச்சந்திரன் செல்வராணி என்பவருக்கு ஏற்கனவே 17.02.2020 ஆம் திகதி கடித மொன்றினால் அறிவிக் கப்பட்டுள்ளார்.

**ஐயாத்துரை ஜெயராசா**
**ஜெயராசா ராதிகா**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் UK Based Fast Food Outlet இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்

- உதவிக் கணக்காளர் - Assist Accountant (Male / Female
- காசாளர் பெண் - Cashier (Female)
- பணிக்குழு உறுப்பினர் - Crew Member (Male/ Female

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். தங்களது சுய விவரக் கோவையை 15.07.2020 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு / மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளிற்கு : 077 7696 443**
tilko.tilak@gmail.com
Kabris Kingdom, Main Street, Jaffna

## ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY

**English for communication (Spoken English) for School leavers, Job seekers, Employees and Parents.**

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, யாழ்ப்பாண/மானிப்பாய் கிளையில் பாடசாலை படிப்பை நிறைவுசெய்தவர்கள், தொழில் தேடுவோர் மற்றும் பெற்றோருக்கான English for communication (3மாதங்கள்) கற்கைநெறி, திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 05-07 மணிவரையும் சனி கிழமைகளில் காலை 09-11 மணி வரையும் மாலை 04 - 06 மணிவரையும் நடைபெற வுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு:
**021 222 4118 / 077 62 79 298 / 077 24 58 370**
**ஏஞ்சல் சர்வதேச பாடசாலை,**
இல 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

Angel International School offers "English for Communication" (Spoken English - 3 Months) course for school leavers, jobseekers, employers and parents at it's Jaffna and Manipay campus. Course will commence during the week days at Monday, Wednesday and Friday from 5.00 pm to 7.00 pm and Saturdays from 9.00 am to 11.00 am and 4.00 pm to 6.00 pm.

Please contact the below for further details:
**021 222 4118 / 077 62 79 298 / 077 24 58 370**
Angel international school,
No, 14 Rasavin thoddam, Jaffna

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 02 . 1940



இறப்பு 10 . 07 . 2020

### இராசையா கனகரத்தினம்

காளி கோவிலடி, மூளாயைப் பிறப்பிடமாகவும், கனடாவினை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகரத்தினம் நேற்று (10.07.2020) வெள்ளிக்கிழமை கனடாவிலுள்ள அவரது இல்லத் தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், பரிமளாதேவியின் அன்புக் கணவ ரும், பாஸ்கரன் (கனடா), பிரேமாவதி, அருள்கரன் (கனடா), கருணா வதி, சகிலாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2020) ஞாயிற் றுக்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறு வதுடன் அன்றைய தினம் காளிகோவிலடி மூளாயில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்**

**077 936 0033 (கரன்), 0016 47980 8725 (பாஸ்கரன்), 0033 60589 1741 (அருள்)**

## உடன் தேவை

1. கத்தோட்டிகாய்
2. வாழைக்காய்

cs (தொகையாக தேவை)

**076 937 5167, 075 086 6867**

## வேலை ஆள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள Tingering Work Shop இற்கு பெயின்ரிங் வேலைகள், ரிங்கறிங் வேலைகள் . உதவியாளர்கள் தேவை.

076 622 4281 - தர்மிகன்
077 680 5923, 076 9059331 - ரட்ணம்
இல. 534, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

- கைதடி - கோப்பாய் உடையனார் தேவலவத்தை
  பரப்பு:- 7 1/2 ஒரே காணி
  பரப்பு:- 5 இருபிரிவாக உள்ளது வீதியோரமாக
- கைதடி ஏ-9 வீதியில் வடமாகாண சபைக்கு முன்பாக கடலறுப்பிட்டி வயல்காணி
  பரப்பு:- 40

தரகர் தேவையில்லை.

**077 589 0195, 077 077 6231**

## வீடு வாடகைக்கு தேவை

சுன்னாகம், மருதனார்மடம், மல்லாகம், கந்தரோடை பகுதிகளில் களஞ்சிய அறையாக பயன்படுத்தக் கூடிய லேடன் லொறி சென்று வரக் கூடிய வசதியுள்ள வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:**077 436 2892**

## ICT வகுப்புகள்

**தரம்: 10, 11**
**தமிழ், ஆங்கில**
மொழிமூல வகுப்புகள்
கொழும்பு பல்கலைக்கழக கணினி பட்டதாரியினால் தனிப்பட்ட, குழு ரீதியில் கற்பிக்கப்படுகின்றன.

**077 671 3303**

**தொழில்சார் கற்கைகள் நிறுவனம்**
**இலவச கனினி, ஆங்கில வகுப்புக்கள்**
**பிரிவு 26**

க.பொ.த (சா/த), (உ/த) உத்தியோகத்தர் களுக்கான இலவச வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

- **Diploma in English**
- **Diploma in Spoken English**
- **Diploma in ICT/ Ms- Office/ Web Development**

பிரிவு 25 மாணவர்கள் 11.07.2020 இல் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம்.
**NVQ** தகைமைகளுக்காக விண்ணப்பிக்க முடியும்.

**IPS** பல்கலைக்கழகம்
அண்மையில், திருநெல்வேலி.
T.P:- 076 685 2529



## கொரோனா...

இலங்கையில் கொரோனாத் தொற்று ஏற்பட்ட நாளில் இருந்து இதுவரையான நாட்களில் என்றும் இல்லாத வகையில் அதிகூடிய தொற்றாக நேற்றைய நிலை பதிவாகியுள்ளது.

நேற்று கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்திலுள்ள 283 பேருக்கு ஏற்கனவே தொற்று உறுதியாகியிருந்த நிலையில் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய மேலும் 13 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. வெலிக்கடை சிறைக்கைதி தொற்று உறுதியானது.

பாகிஸ்தானில் இருந்து வருகை தந்த ஒருவர், இந்தியாவில் இருந்து வருகை தந்த 9 பேர் மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இருந்து திரும்பிய 3 பேர் என 13 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இதுவரை 339 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் பலரிடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளவர்களின் மொத்த மொத்த எண்ணிக்கை 2,450ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## வடபகுதியில்...

குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள தாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

யாழ். மாநகரசபை பகுதியைச் சேர்ந்த 2 குடும்பங்களும் சண்டிலிப்பாய் பகுதியை சேர்ந்த 1 குடும்பமும் கோப்பாயைச் சேர்ந்த 1 குடும்பமும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை, மன்னார், உப்புக்குளம் பகுதியை சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளனர். வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சிறைக்கைதிகளுடன் பழகிய நபர் என்பதால், விடுதலை செய்யப்பட்டவர் நேற்று மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக வடமாகாண சுகாதா சேவைகள் பணிப்பாளர் கூறினார்.

இவர்கள் பழகிய 14 பேர் தற்போது சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ஒ.5)

## கந்தக்காடு...

சென்று திரும்பியவர் என்று தெரியவந்துள்ளது. அதே போல் மறுவாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பலர் தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். மறுவாழ்வளிக்கப்பட்ட நபர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் நலம் விசாரிப்பதற்கு நிலையத்துக்குச் சென்றிருந்ததாகவும் அவர்களைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (ஒ.5)



# பிள்ளைப் பூச்சிக்கெல்லாம் கொடுக்கு முளைத்துள்ளது

## வேலுகுமார் ஆவேசம்

நுவரெலியா, ஜூலை 11

என்னை விமர்சித்து வாக்குக் கேட்பதே சிலரின் பிரசார வியூகமாக இருக்கின்றது. இன்று பிள்ளைப் பூச்சிகளுக்கும் கொடுக்கு முளைத்துள்ளது. கோழி கூவி பொழுது விடியுமா என்ன? என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்ட கையோடு கிடைத்திருக்க வேண்டிய உரிமைகளைக் கூட தமிழ் முற்போக்குக் கூட்டணியே கடந்த நான்கரை வருடங்களில் பெற்றுக் கொடுத்தது. எனவே, மலையகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வல்லமையும், பேரம் பேசும் ஆற்றலும் எமது அணிக்கே இருக்கின்றது. மலையக மக்களுக்காக தமிழ் முற்போக்குக் கூட்டணி எதனையுமே செய்யவில்லை என்றும், கண்டி மாவட்டத்தில் கூட அபிவிருத்திகள் இடம்பெறவில்லை என்றும் பருவகால வேட்பாளர்களும், அரசாங்கத்தின் கைக்கூலிகளும் மக்கள் மத்தியில் போலிப்பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். அதுவும் என்னால் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தின்மீது நின்றபடி, எனது முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட தனிவீடுகளைப் பார்த்தப்படியே எதுவுமே நடக்கவில்லை என வாய்க்கூசாமல் பொய்யுரைக்கின்றனர். என்னை விமர்சித்து வாக்கு கேட்பதே சிலரின்




பிரசார வியூகமாக இருக்கின்றது. இன்று பிள்ளை பூச்சிகளுக்கும் கொடுக்கு முளைத்துள்ளன. கோழிகூவி பொழுது விடியுமா என்ன? எனவே, எப்படிதான் விமர்சித்தாலும் எனக்கான மக்கள் ஆதரவைத் தடுக்க முடியாது. மக்கள் சக்தி என்னுடனேயே இருக்கின்றது - என்றார். (ஐ)

# ‘தனியாளாக மோதத் தயார்; திரண்டு வாருங்கள் பார்க்கலாம்’

## சஜித் அணியினரை விவாதத்துக்கு அழைக்கிறார் ரவி கருணாநாயக்க

**கொழும்பு, ஜூலை 11**

**“பிணைமுறி விவகாரம், ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோகமிழைத்தது யார் என்பது உட்பட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சஜித் பிரேமதாசவுடன் நேரில் விவாதிப்பதற்கு நான் தயார். சஜித் அணி மொத்தமாக வந்தாலும் தனி ஒருவனாக பதிலடிகொடுப்பேன்.” என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க சவால் விடுத்துள்ளார்.**



மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய திருடன் கொழும்பு மாவட்டத்தில் இருக்கின்றான் என்று சஜித் குறிப்பிடுகின்றார். இது உங்களை நோக்கித் தொடுக்கப்படும் விமர்சனம்தானே என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரவி கருணாநாயக்க இந்தச் சவாலை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

“இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கும் நபரும் கொழும்பில் தான் இந்தமுறை போட்டியிடுகின்றார். சிலவேளை, அவராகவும் இருக்கக்கூடும். அரசியலுக்கு வருவதற்கு முன்னரே நான் செல்வந்தன். மக்களுக்கு சேவையாற்றவே அரசியலுக்கு வந்தேன். ஆனால், தனிப்பட்ட ரீதியில் தாக்குதல் நடத்துகின்றனர்.

எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதனை நிரூபிப்பதற்கு நான் தயார். விமர்சனங்களை முன்வைப்பவர்களுக்கு பதிலடியும் கொடுப்பதற்கு தயார் நிலையிலேயே இருக்கின்றேன். முடிந்தால் சஜித்தை விவாதத்துக்கு வரச் சொல்லுங்கள். தனியாக முடியாவிட்டால் அவரைச் சூழவுள்ளவர்களையும் அழைத்து வரச் சொல்லுங்கள்.

சஜித், சம்பிக்க, அஜித்பிபெரேரா, சுஜீவ சேனசிங்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன என எல்லோரும் வரட்டும். அவர்களின் வண்டவாளங்களையும் தண்டவாளத்தில் ஏற்றுவேன்.

அதேவேளை, எனக்கும் கொழும்பில் உள்ள பாதாள குழுக்களுக்குமிடையில் எவ்வித தொடர்பும் இல்லை. மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பதாலேயே என்மீது விமர்சனங்களை முன்வைக்கின்றனர்” - என்றார். (து-44)

# காடுகளை அமெரிக்காவுக்கு தானம் செய்யும் அரசாங்கம்

## சம்பிக்க குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 11

சுற்றுச்சூழலை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சியை அமைத்த ராஜபக்ஷர்கள் இன்று காடுகளை அமெரிக்காவுக்கு தாரை வார்க்கின்றனர் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் பதாகைகள் அச்சிடப்போவதில்லை என்றும் பட்டாசு கொளுத்துவதில்லை என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கூறினார்.

ஆனால் கம்பஹா மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவுடைய பதாகைகள் எல்லா இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சூழலை நேசிப்பதாகக் கூறி காடுகளை வெட்டுவதற்கும் மணல் அகழ்வதற்கும் பொதுஜன பெரமுனவினருக்கு அனுமதியளித்துள்ளார்.

மணல் அகழ்வால் களனி மற்றும் களு கங்கை என்பன முற்றாகச் சீரழிக்கப்பட்டன. அதனைத் தடுப்பதற்காக நாம் அனுமதிப்பத்திரங்களை வழங்கினோம். ஆனால் தற்போது அவை இரத்துச் செய்யப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் முற்றாக சீரழிக்கப்பட்டது. அதற்கு தற்போதைய அரசாங்கமே அனுமதி வழங்கியது. ஆனால் பொது மக்கள் மத்தியில் இயற்கையை அதிகளவு நேசிப்பவர்களாக தங்களைக் காண்பித்துக் கொள்கின்றனர்.

கடந்த காலங்களில் வில்பத்து பற்றி உண்மைகளை வெளிப்படுத்தப் போவதாகக் கூறினார்கள். ரிஷாத் பதியுதீன் மீது குற்றஞ் சுமத்தினர். ஆனால் தற்போதைய அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன வில்பத்துப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காட்டை வெளிநாட்டவர்களுக்குத் தாரை வார்த்துள்ளார்.

இலங்கையில் நூற்றுக்கு 7 சதவீதமான நிலப்பரப்பு காடுகளாகும். பிரதேச செயலர்களின் கீழ் காணப்பட்ட இவற்றை வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டு வந்தார் - என்றார். (ஐ)

# மொட்டுக் கட்சியே ஆட்சியமைக்கும்

## பிரபா கணேசன் நம்பிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 11

பொதுஜன பெரமுன அரசுதான் ஆட்சிஅமைக்கப் போகின்றது. ஆட்சியமைப்பவர்களுடன் இணைந்து மக்களுக்கு அபிவிருத்திகளைப் பெற்றுக்கொடுப்போம் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னியில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் வன்னிமாவட்டத்தில் மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். கடந்த காலங்களில் மக்கள் நாடாளுமன்றத்துக்கு மாகாணசபைக்கு அனுப்பிய பிரதிநிதிகள் சரியான வேலைத்திட்டங்களை முன்னெடுக்காத காரணத்தால் மாற்று அணி உருவாக்கப்படவேண்டும் என்பதில் மக்கள் கவனமாக இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு எதுவித சேவையும் ஆற்றவில்லை என்பதை அவர்கள் நன்றாகப் புரிந்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கிராமத்துக்கு வரவேண்டாம் என்னும் நிலையில் மக்கள் புதிய மாற்றத்தை வேண்டியுள்ளனர். இந்த எதிர்ப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டு செல்வதற்காக பல சிங்களக் கட்சிகள் வந்து தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக பணத்தை வாரிஇறைத்துச் செல்கின்றார்கள். மாற்று இனத்தவர்களுக்கு தமிழர்கள் வாக்களிக்கத் தயாரில்லை என்பதையும் மக்களிடத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தத் தேர்தலின் ஊடாக அமையப்போகும் அரசு பொதுஜன பெரமுன அரசாகத்தான் இருக்கப்போகின்றது. சுவர்க் கடிகாரச் சின்னத்தில் தனித்துவமாகப் போட்டியிட்டாலும் அமையப்போகும் அரசாங்கத்திற்கு ஆதரவை நாங்கள் வழங்கப்போகின்றோம். அதன் ஊடாக வன்னி மாவட்ட மக்களின் அனைத்து அபிவிருத்திகளையும் அரசுடன் பேசிப் பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ப-19)

# பஸிலை பிரதமராக்கவே அரசு செயற்படுகிறது

## ஹிருனிக்கா தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 11

பஸில் ராஜபக்ஷவை பிரதமராக்கும் எண்ணத்திலேயே அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருனிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதாரத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை மறைப்பதற்காக கொவிட் - 19 வைரஸ் பரவலைக் காரணங்காட்டி வருகின்றனர்.

இதேவேளை வைரஸ் பரவலின் இரண்டாம் அலை தொடர்பில் தற்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை மேற்கொள்ள அரசாங்கத்திடம் நிதி இல்லை.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு வெளிநாடுகளிலிருந்தும் , உள்நாட்டில் சில தனவந்தர்களிடமிருந்தும் கோடிக்கணக்கான நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கு என்ன நடந்தது? மக்களுக்கு இது தொடர்பில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்". என்றார். (ஐ)

## அமைச்சுப்...

வது அத்தியாவசிய தேவை. புதிய ஆட்சியில் அமைச்சவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்னவிதமான அதிகாரங்கள் என்பவற்றை பேரம் பேச எமக்குப் பலம் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

யாழ்ப்பாணம் செம்பியன்பற்றில் நேற்றுக் காலை நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அரசுடன் இணைவதா இல்லையா என்ற தீர்மானம் பின்னர் எடுக்கப்படுவதாக இருந்தாலும், ஏற்கனவே சில தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துகிறோம். வடக்கு கிழக்குக்கான மாற்று பொருளாதார நிறுவனமொன்றை ஏற்படுத்தும் முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உதவியுடன் நமது பாரம்பரிய வாழ்வாதார தொழில்களை நவீனப்படுத்தும் ஒரு முறையையும், புதிதாக தொழில்நுட்ப ரீதியில் நவீன உலகில் வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களையும் வகுக்கவேண்டும்.

காங்கேசன்றை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, வாழைச்சேனை காகித தொழிற்சாலை என்பன ஜீ.ஜீ.பொன்னம்பலம் அமைச்சராக பதவிவகித்த காலப்பகுதியில் அமைக்கப்பட்டன. பின்னர் அவர் அமைச்சுப் பதவியை துறந்தபோது, பெரும்பான்மை இனத்தவருடன் இணங்கி செயற்படுவதில் நம்பி இறங்கியது தவறென்பது எனக்கு தெரிகிறது. அதனால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

1952ஆம் ஆண்டு தேர்தலில் அவரது கட்சி முதன்மைக் கட்சியாக வெற்றிபெற்றது. தமிழ் அரசுக் கட்சிக்கு 2 ஆசனங்கள் தான் கிடைத்தன. ஆனால் அதற்கு பிறகு நடந்த எல்லா தேர்தல்களிலும் தமிழ் அரசுக் கட்சி முதன்மையான இடத்தை பெற்றது. ஆட்சியதிகாரம் பிரதேசவாரியாக, சமஷ்டி கட்டமைப்பின் கீழ் பகிரப்பட வேண்டுமென சொல்லி வருகிறது. 1956ஆம் ஆண்டியிலிருந்து மக்களின் ஆதரவு அதற்கு இருந்து வருகிறது. இன்று வரை சமஷ்டி என்ற ஆட்சிமுறைக்கு குறைவாக வாக்களித்ததில்லை. ஒருமுறை தனிநாட்டுக்கும் வாக்களித்தனர். எங்கள் மக்களின் எதிர்பார்ப்பு அரசியல் உரித்துக்களை நாம் பெற வேண்டும். எமது உரித்துக்களைப் பெற்றால் பொருளாதார விடயங்களை நாமே கையாளலாம் என்பதாகவே இருந்தது. இந்த போக்கிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை காண முடிகிறது.

நான் போகும் கூட்டங்களில் இளைஞர்கள் நேரடியாக இந்தக் கேள்வியை கேட்கிறார்கள். சென்ற தடவை இருந்த அரசைக் கவிழ்த்து, 2015இல் புதிய அரசொன்றை அமைத்தபோது நாம் உறுதுணையாக இருந்தோம். இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான சந்தர்ப்பமிருந்ததால் அரசை ஆதரித்தோம். அந்த தேர்தலின் போதும் இந்த கேள்வி எழுப்பப்பட்டது. அமைச்சரவையில் சேர வேண்டுமென சொல்லப்படவில்லை. சேருவீர்களா எனக் கேட்கப்பட்டது. நாங்கள் சேரவில்லை. ஏனெனில் அரசியல் தீர்வொன்றை பேச்சின் மூலம் பெறுவதற்கு, எமது பேரம் பேசும் சக்திக்கு இது தடையாக இருந்துவிடும் என்பதால் நாம் அமைச்சரவையில் சேரவில்லை. அரசில் இணைந்தால் கூட்டுப்பொறுப்பு உள்ளது. அரசின் எல்லா முடிவிற்கும் நாமும் பொறுப்பாளிகள். தற்போது ஆட்சி ராஜபக்ச குடும்பத்தின் கைக்கு சென்றுள்ளது. அவர்களின் அரசியல் அணுகுமுறைகள் எப்படியானதென எல்லோருக்கும் தெரிகிறது. இந்த அரசில் ஒரு கூட்டுப்பொறுப்புடன் அமைச்சரவையில் இணையலாமா என்கிற கேள்வியுண்டு. என்னைப் பொறுத்தவரை கடந்த அரசில் அமைச்சரவை பொறுப்புக்களை ஏற்றிருந்தால், இன்னும் கூடுதலான நிதிகளைப் பெற்றிருக்கலாம்.

அரசியல் தீர்வொன்று ஏற்படுவதில் உள்ள தாமதம், மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பொருளாதார ரீதியாக நாம் வலுப்பட வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் நலிவடைந்து விடுவோம். வளர்ச்சியை நாம் அடையாவிட்டால், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பில்லையென்றால் வெளிநாட்டுக்கு செல்வதையே இளைஞர்கள் ஒரேயொரு தெரிவாக வைத்துள்ளனர். அப்படி வெளிநாடு சென்றால் குடும்பங்கள், சமூகங்களின் வாழ்வாதாரம் ஓரளவு விருத்தியடையும். அதன் மூலம் எமது பொருளாதாரம் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தின் மூலம், இப்பொழுது உள்ளதைப்போல ஓரளவு விருத்தியடையும். ஆனால் தீர்வென்பது இடம்பெறாமலே போய்விடும். எமது எண்ணிக்கையில் குறைவடைந்தால், தேசிய இனப்பிரச்சனை இருப்பதாகவே சொல்ல முடியாமல் போய்விடும். இந்த இரண்டுக்கும் இடையிலேயே நாம் இப்பொழுது சிக்கியுள்ளோம்.

அரசுக்கு ஆதரவு கொடுப்பதா இல்லையா, சேர்வதா இல்லையா என்ற தீர்மானங்கள் எடுக்கும்போது, அபிவிருத்தி என்கிற ஒரு விடயத்தை மையமாக வைத்து தீர்மானம் எடுக்க முடியாமல் உள்ளது. நாம் எல்லா விடயங்களையும் ஆராய்ந்துதான் முடிவெடுப்போம். இந்த அரசுக்கு தேவை மூன்றில் இரண்டு பெரும்பான்மை. ஆனால் அவர்கள் அதை பெறமாட்டார்கள் என்பதுதான் அரசியல் நோக்கர்களின் கணிப்பு. இப்படியான நிலைமையில் எங்களது ஆதரவு அவர்களிற்கு தேவைப்படலாம். அது தேவைப்பட்டால் எந்த அடிப்படையில், நிபந்தனையில் அரசுடன் இணையலாமென்பது பற்றி நான் ஏற்கனவெ சொல்லியுள்ளேன். அதை சொன்னதும் அரச தரப்பிலிருந்தும் நல்ல சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளனர். ஆனால் நான் அதை சொன்ன கணமே தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

அரசமைப்பு சீர்திருத்தத்திற்காகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது. புதிய அரசமைப்பை உருவாக்கவதற்காக, புதிய அரசமைப்புத் தேவையென முனைப்பாக வேண்டி நிற்பவர்கள் நாங்கள். அதனால், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் வரும்போது, அதை நிறைவேற்ற நாம் அரசுடன் பேச்சு நடத்தலாம். எமது அரசியல் அபிலாசைகள் நிறைவேறும் பட்சத்தில் சிந்திப்போம் என்று சொல்லியுள்ளேன். அது இப்பொழுது நடக்குமா நடக்காதா என்பதை இப்பொழுது சொல்ல முடியாது. முதலில் தேர்தல் முடிய வேண்டும். ஆசன எண்ணிக்கையை தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பின்னரும் ஒரு பேரம் பேசும் படலம் இருக்கும். அதில் என்ன முடிவெடுக்கப்படும் என தற்போதைக்கு சொல்ல முடியாது. வெறுமனே நாங்கள் அரசில் இணைகிறோம், அமைச்சர் பதவியை ஏற்கிறோம் என தீர்மானங்களை எடுக்க முடியாது. ஆனால், இதையெல்லாம் சொல்வதால், நாங்கள் ஒருபோதும் அதைச் செய்ய மாட்டோம் என சொல்லவில்லை. அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் சேர்ந்து வரவேண்டும். சென்ற ஆட்சிக்காலத்தில் நாம் அமைச்சரவையில் இல்லாவிட்டாலும், அமைச்சரவையில் இருந்தவர்களை விட அதிக அபிவிருத்திகளைச் செய்ய முடிந்தது.

வடக்கு கிழக்கிற்கான மாற்று பொருளாதார நிறுவனமொன்றை ஏற்படுத்தம் முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உதவியுடன் நமது பாரம்பரிய வாழ்வாதார தொழில்களை நவீனப்படுத்தும் ஒரு முறையையும், புதிதாக தொழில்நுட்பரீதியில் நவீன உலகில் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களையும் வகுக்க வேண்டும். அரசின் உதவியை கூட எதிர்பார்க்காமல் நாங்களாகவே ஒரு பொருளாதார திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். தேர்தலின் பின்னர் அது இயங்கத் தொடங்கும். அதன் முழுமையான பிரதிபலனை பெற ஓரிரு வருடங்கள் ஆகும். இவையெல்லாம் சாத்தியமாக தேர்தல் முடிவுகள் முக்கியமானவை. அமைச்சவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்னவிதமான அதிகாரங்கள் என்பவற்றை பேரம் பேச எமக்கு பலம் இருக்க வேண்டும். அல்லது வெளியே இருந்தாலும் கூட, இத்தனை எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் வாக்களிப்பு அரசுக்கு தேவையாக இருக்கும் போது அந்த பேரம் பேசலை செய்யலாம். எப்படியான பாத்திரத்தை நாங்கள் வகிக்கப் போகிறோம் என்பது இப்பொழுது தெரியாவிட்டாலும், எங்களிற்கு தெரிந்த ஒன்று, நாங்கள் பலமான ஒரு அணியாக நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் - என்றார். (ஒ.5)

## தனிமைப்படுத்தல்...

தலுக்காக தனிமைப்படுத்தல் சட்டங்களை உள்ளடக்கி சுகாதார அமைச்சால் எவ்வித வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படவில்லை. தனிமைப்படுத்தல் கட்டளை சட்டத்துக்கு அமைய அதிகாரங்களைப் பயன்படுத்துவது பற்றியும் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பும் இதுவரையில் விடுக்கப்படவில்லை

அதேபோன்று தொடர்ச்சியாக இவ்வாறு அபாய நிலைமையை கவனத்தில் கொள்ளாமல் செயற்படுகின்றமைக்காக அதிகாரிகளை தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்க நாம் தயார் இல்லை. எதிர்வரும் சில தினங்களில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக சட்ட விதிமுறைகளை உள்ளக்கிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டும் என்று கோருகின்றோம்.

தனிமைப்படுத்தல்விதிமுறைகள் அனைத்தையும் சட்டமாக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு செய்யவில்லை என்றால் பொதுச் சுகாதார பரிசோதகர்களையும் பொது மக்களையும் அது ஆபத்துக்குள் தள்ளிவிடும். அதனால் பொதுச் சுகாதார பரிசோதகர்களை சேவையிலிருந்து நீக்கி பொது மக்களுடன் இணைந்து கொரோனா ஒழிப்புக்காக செயற்பட வேண்டிய முறைகளை சட்டமாக்குமாறு சுகாதார அமைச்சுக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்குத் தயாராகவுள்ளோம்- என்றார். (எ)

## நாடு...

கலாக அமையலாம். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கந்தகாடு மறுவாழ்வு நிலையம், வெலிக்கடைச் சிறைச்சாலை ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், அங்கு பணிபுரிபவர்கள் என்று 450 பேருக்கு மேற்பட்டோருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 284 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நாடு முடக்கப்படுமா என்ற அச்சம் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் சவேந்திர சில்வாவிடம் வினவியபோது, வெலிசறை க்டற்படை முகாமில் ஏற்பட்ட தொற்றுப் போன்று கந்தகாட்டில் ஏற்பட்ட தொற்றைக் கூற முடியாது. வெலிசறை கடற்படை முகாமில் கடற்படையினர் விடுமுறையில் வீடு சென்று வந்தார்கள்.

கந்தக்காடு தனிமைப்படுத்தல் மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால் அங்குள்ளவர்களுக்கு பரவித்தான் அது முடிவுக்கு வரும். கந்தகாடு தனிமைப்படுத்தல் மையத்தில் பணியாற்றுபவர்கள் வீடுகளுக்குச் சென்று வந்துள்ளார்கள். அவர்களில் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டால் நிலைமை சிக்கலாகலாம். அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்று அந்தச் சங்கிலியுடன் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்பட்டு அந்தப் பிரதேசங்களை முடக்க நேரிடலாம், என்றார். (ஒ,5,22)

## மருத்துவமனையில்...

மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதன் அறிக்கை கிடைக்கும் வரை மருத்துவமனையைத் தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தராக 08 வருடங்கள் (2012 முதல் 2020 ஆண்டு வரை) அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றியவர்
* மூத்தோருக்கான ஆன்மீகப் பயணங்கள் 33
* மாற்றுத்திறனாளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், நலிவுற்றோருக்கான வாழ்வாதாரங்கள்.

வேதநாயகம் தபேந்திரன்
B.Com (Jaf),
PGD,PDS (Jaf), M.A (Jaf)
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
X 9
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
கிளிநொச்சி மண்ணின்
சேவைகளின் நாயகன் வெற்றி
பெற வாழ்த்துகின்றோம்.
கிளிநொச்சி மக்கள் உயர
இவ்வெற்றி காலத்தின் தேவை.
கிளிநொச்சி மூத்தோர் நலன்விரும்பிகள்

# கிணற்றில் இருந்து சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 11

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் நேற்றிரவு ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

34 வயதுடைய நித்தியானந்தம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா சுந்தரபுரம் பகுதியில் இடம்பெற்ற சடங்கு நிகழ்வு ஒன்றில் இவர் கலந்துகொண்டுள்ளார். இரவு 9.00 மணியளவில் அவரை காணவில்லையென தேடிய சமயத்தில் சடங்கு நிகழ்வு இடம்பெற்ற வீட்டில் காணப்படும் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபரின் தலையின் பின்பகுதியிருந்து இரத்தம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கும் உறவினர்கள், இறப்புத் தொடர்பில் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்தவர் பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-18)

# சந்தேகநபர்கள் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 11

தருமபுரம்பொலிஸ்பிரிவுக்குட்பட்டபகுதிகளில்நடந்தபல்வேறுகுற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் இரவு ஒருவர் தருமபுரம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்றும், அதன்பின்னர் நேற்று ஒருவர் கிளிநொச்சியில்வைத்துக்கைதுசெய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து சிறப்பு அதிரடிப் படையினர் வாள் ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர், அவர்கள் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-113)

# வவுனியாவில் நேற்று காற்றுடன்கடும்மழை

வவுனியாவில் நேற்று மதியம் முதல்மாலைவரைபெய்தகாற்றுடன்கூடியமழையால்பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நேற்றுமதியம் 2.15 முதல் மாலை 6.15 வரைசுமார் 4 மணித்தியாலங்கள்வரை பெய்த மழையால் வவுனியா - மன்னார் வீதி , நூலக வீதி , வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில்வெள்ளநீர்வீதிகளில் தேங்கியதுடன், தாழ் நிலப் பிரதேசங்களும்நீரில்மூழ்கியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கடும்வெப்பநிலைகாரணமாக குடிதண்ணீருக்குப் பலத்ததட்டுப்பாடுநிலவிய நிலையில்நேற்றுப்பெய்தமழையால்மக்கள்மகிழ்ச்சியடைந்துள்ளனர். (எ-18)

House For Rent
New Upstair Building, Attached Bathroom
With Furnitures Rent -38 000
Advance - Negotiable.
Chundukuzhi, Jaffna.
077 225 9030

சிறுநீரகம் தேவை
2 சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட
மிகவும் வறுமை நிலையிலுள்ள
40 வயது ஆண் நோயாளி ஒருவருக்கு
0⁻ குருதிப் பிரிவை சேர்ந்த சிறுநீரகம்
உடனடியாக தேவை.
தானமளிக்க விரும்புபவர்கள்
தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 163 2822
077 669 7657
(ss.326621) (13.17)

## கொரோனாத்...

அந்தந்த பாடசாலைகளின் உள்ளே வைத்திய ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றாவிட்டால், இது சமூகத்தில் பரவும். இரண்டாம் அலை எனும் நிலையை அண்மித்த கட்டத்திலேயே தற்போது நாம் இருக்கிறோம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கடந்த இரண்டு வார காலத்தில் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக ஆயிரத்து 600 பி.சி.ஆர் பரிசோதனைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 68 ஆயிரம் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமானால் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 2 ஆயிரத்து 500 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் ஆயிரத்து 600 பி.சி. ஆர். பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதற்கான காரணம் என்ன?.

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்ட கைதிகளிடம் அவர்கள் அங்கு செல்வதற்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அந்த முகாமுக்கு அனுப்பப்பட்ட எவருக்கும் தொற்றில்லை. ஆன்றால், தற்போது அங்கிருந்து ஒரு நோயாளி பதிவாகியுள்ளார். மீண்டும் மீண்டும் பரிசோதனைகளை நடத்தாத சிக்கலையே இது எடுத்துக்காட்டுகின்றது.

அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். அதற்காக தீர்மானங்களை எடுப்பதற்காக சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான தொழில்நுட்பக் குழு ஒரு மாதமாகியும் இன்னும் கூடவில்லை. இது மிகவும் பாரதூரமான விடயம் என நாம் எச்சரிக்கை விடுக்கிறோம். இரண்டாம் அலை ஒன்று வந்தால், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களின் பெயர்களைக் கூறுவதற்கும் நாம் தயங்கமாட்டோம் என்றார். (எ)

## சரவணபவனின்...

யுள்ளனர். சங்கானை, தேவாலய வீதியில் உள்ள வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரும்புக் கம்பிகள், வாள்கள், கொட்டன்களுடன் 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று வீட்டிலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

“2 மோட்டார் சைக்கிள்களில் முகங்களை மூடிக் கட்டியவாறு வந்த 6 பேர் தாக்குதலை நடத்தினர். வீட்டின் கதவு, வேலித் தகரங்கள் என்பவற்றை வாள்களால் வெட்டிச் சேதப்படுத்தினர். வீட்டு வளவுக்குள் அவர்கள் வந்தபோது நாங்கள் சத்தமிட்டதை அடுத்து தப்பியோடினர்” என்று வீட்டின் உரிமையாளரான 54 வயதான கிருஸ்ணன் தெய்வேந்திரன் தெரிவித்தார். இவரது மகனே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் தனிப்பட்ட உதவியாளராகப் பணியாற்றுகின்றார்.

கும்பலின் தாக்குதலில் வீட்டின் கேற், வேலித் தகரங்கள் என்பன கடும் சேதமடைந்துள்ளன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணவன் சம்பவ இடத்துக்கு நேற்றிரவு நேரில் சென்றார். அங்கு நிலைமைகளை நேரில் பார்த்த பின்னர், இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு ஆவண செய்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம,எ,21)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
27 . 09 . 1948
உதிர்வு
12 . 06 . 2020

அமரர் வீரகத்தி சேந்தன் (பொறியியலாளர்)
( Skylark Engineers and Constructors - நிறுவனர்)

கடந்த 12.06.2020 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் வீரகத்தி சேந்தன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களும், மலர்வளையம், மின்னஞ்சல், தொலைபேசி போன்ற பல்வேறு ஊடகங்கள் வாயிலாக எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், பல்வேறு வகையில் இறுதி நிகழ்வில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு வேண்டுகின்றோம்

பெரியதோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
குடும்பத்தினர்.
+ 3164 701 6375, 077 206 1425

IELTS
திருமணம் முடித்து Spouse விசாவில்
UK செல்வோருக்கான பாடநெறி
IELTS Life Skill A1 and IELTS (Academic / General)
100% PASS GUARANTEE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Week Days and Weekend Days
ஒவ்வொரு மாணவ / மாணவி மீதும் தனிப்பட்ட கவனம்
NEW ENGLISH WORLD
Stanly Road, Jaffna.
(சிறீதர் தியேட்டருக்கு அருகில்)
Lecture By:Mrs. R. Anusanthy (அனுமிஸ்)
Mobile - 077 463 9585



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.